இதழ் 360
11 அக்டோபர் 2025
17 பக்கங்கள்

# இலக்கு

வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER
youtube.com/@IlakkuWeb2.0
facebook.com/ilakku.ilakku.10
twitter.com/Ilakku1



1987.10.10 அன்று வீரச்சாவடைந்த முதல் பெண் மாவீரர் 2ம் லெப். மாலதி அவர்களின் நினைவுகளுடன்...



விதுரன்

# இலங்கை எதிர்க்கும் ஐ.நா.தீர்மானம் தமிழர்களுக்கான வெற்றியல்ல



# காற்றாலையும் மன்னார்த் தீவும்!

தாமோதரம் பிரதீவன்,மனித உரிமை செயற்பாட்டாளர், ஆய்வாளர்,எழுத்தாளர்.



# காசா போர் நிறுத்தம்

## எப்போது இறுதித் தீர்வு சாத்தியமாகும்?

வேல்ஸில் இருந்து அருஸ்


© 2025 இலக்கு இணையம்

# தையிட்டி விகாரை விவகாரம் சில வாரங்களில் தீர்க்கப்படும்



யாழ்ப்பாணம் தையிட்டி விஹாரை தொடர்பான சர்ச்சைக்கு எதிர்வரும் சில வாரங்களுக்குள் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாக, அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்வைத்த குற்றச்சாட்டுக்குப் பதிலளித்து, பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மத விவகாரங்கள் அமைச்சு மற்றும் துறைசார் அதிகாரிகளுடன் இணைந்து தையிட்டி விஹாரை பிரச்சினை தொடர்பான அறிக்கையைத் தயார் செய்துள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

அதற்கமைய, மிக விரைவில் தையிட்டி விஹாரை பிரச்சினைக்கான தீர்வு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் - பலாலி சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பிமல்ரத் நாயக்க பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி ஒதுக்கீடுகள் பகிர்ந்தளிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தநிலையில் விமான நிலையத்தின் ஓடுதளத்தை நிர்மாணிக்கவும் திட்டமிடப் பட்டுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயம்: முன்னாள் தலைவர், செயலாளருக்கு பயங்கரவாத தடுப்பு பிரிவு அழைப்பு

வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தின் முன்னாள் தலைவர் மற்றும் செயலாளர் பயங்கரவாத தடுப்பு விசாரணை பிரிவிற்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டனர்.

நெடுங்கேணி வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத் தின் முன்னாள் தலைவர் செ.சசிகுமார் மற்றும் செயலாளர் து.தமிழ்ச்செல்வன் ஆகியோரை விசாரணை ஒன்றுக்கு வருமாறு வவுனியா பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவு பொலிசாரால் (ரி.ஐ.டி ) கடந்த இருதினங்களுக்கு முன்பாக அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.



விசாரணையின் போது ஆதிசிவன்ஆலயம்சார்ந்த விடயங்களையும், தமது தனிப்பட்ட தகவல்களையும் கேட்டிருந்தனர் எனவும் தாம் அனைத்திற்கும் பதில் வழங்கியிருந்தோம் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# ரணிலுடன் இணையும் முடிவை அறிவித்தார் சஜித்

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை மற்றும் வழிகாட்டுதலின் கீழ், ஒரு கூட்டு அரசியல் திட்டத்தை தொடங்குவதற்கான பொறி முறையை ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு ஏகமனதாக அங்கீகரித்துள்ளது.

இந்த தீர்மானத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அறிவித்துள்ளார். அதன்படி, நாட்டினதும் மக்களினதும் பிரச்சினைகளுக்கு நடைமுறைச் சாத்தியமான, ஜனநாயக மற்றும் முற்போக்கான தீர்வுகளை வழங்குவதே இந்த முயற்சியின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு மற்றும் முகாமைத்துவக் குழு ஆகிய இரண்டும் பொதுக் கொள்கை கட்டமைப்பின் கீழ் இணைந்து பணியாற்றுவதற்கு கூட்டு உடன்பாட்டை எட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.



இந்த கூட்டிணைவில், இரு கட்சிகளும் தமது தனித்துவமான அடையாளங்களைப் பேணிக் காக்கும் என்றும் அவர் உறுதிப்படுத்தினார். இதனிடையே, சஜித் பிரேமதாச தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவராக நீடிப்பார் என்றும், தலைமைப் பதவி குறித்து எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இந்த ஒருங்கிணைந்த அரசியல் பயணத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் அடிமட்ட உறுப்பினர்கள் தமது ஆசிகளையும், ஆதரவையும் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்

# இஸ்ரேல் – பாலஸ்தீன போர் நிறுத்தம்: மக்கள் மகிழ்ச்சி



காஸாவில் உள்ள அனைத்து, அதாவது உயிருடன் உள்ள 20 பணயக்கைதிகளையும், ஹமாஸ் அமைப்பினர் விடுவித்தல், இஸ்ரேலிய படையினர் ஒப்புக் கொள்ளப்பட்ட இடத்திற்கு திரும்புதல் மற்றும் 1,950 பாலஸ்தீன கைதிகளை விடுவித்தல் ஆகிய வற்றை அனுமதிக்கும் அமெரிக்க மத்தியஸ்த போர்நிறுத்த திட்டத்தின் முதல் கட்டத்திற்கு இஸ்ரேலும் ஹமாஸும் கடந்த வியாழக்கிழமை (9) ஒப்புக்கொண்டுள்ளன.

பணயக்கைதிகள் திங்கட்கிழமை(13) விடுவிக்கப்பட வாய்ப்புள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார். பணயக்கைதிகள் விடுதலை நடைபெறுவதற்குகாசாவில் போரை முடிவுக்குக் கொண்டு வரும் "முறையான அறிவிப்பு" செய்யப்பட வேண்டும் என்று ஹமாஸின் மூத்த அதிகாரி ஒருவர் முன்னர் தெரிவித்திருந்தார். ஹமாஸ் ஆயுதக் குறைப்பு மற்றும் காஸாவை நிர்வகித்தல் உள்ளிட்ட திட்டத்தில்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள உலகளாவிய கடன் எச்சரிக்கை



உலகளாவிய பொதுக் கடன் ஐந்து ஆண்டுகளுக்குள் உலகப்பொருளாதாரத்தின்அளவை விட அதிகமாகும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜார்ஜீவா புதன் கிழமை(8) எச்சரித்துள்ளார், இந்த போக்கை உலகெங்கிலும் உள்ள கொள்கை வகுப்பாளர்களுக்கு "நிதானமான யதார்த்தம்" என்று அழைத்தார்.

பொதுக்கடன் என்பது அரசாங்கங்கள், வணிகங்கள் மற்றும் குடும்பங்கள் வைத்திருக்கும் மொத்தக் கடனைக் குறிக்கிறது. கடன் வாங்குவதில் அதிகரிப்பு நிதிப் பற்றாக்குறைகள், தொற்றுநோய் மரபுகள் மற்றும் முன்னேறிய மற்றும் வளர்ந்து வரும் பொரு

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# புதிய பெண் பேராயரை ஆபிரிக்க திருச்சபை நிராகரித்துள்ளது

பிரித்தானியா, கேன்டர்பரியின் (Canterbury) முதல் பெண் பேராயரின் நியமனத்தை நைஜீரிய ஆங்கிலிகன் திருச்சபை நிராகரித்துள்ளது.

நைஜீரிய பேராயர், பெருநகர மற்றும் நைஜீரிய திருச்சபையின் பிரைமேட் ஹென்றி நுடுகுபா, சாரா முல்லலியின் நியமனத்தை "இரட்டை ஆபத்து" என்று விவரித்தார், முதலில் பெண்தலைமையை ஏற்றுக்கொள்ளமுடியாதவர்கள்மீது திணித்ததற்காகவும், இரண்டாவது



"ஒரே பாலின திருமணத்தின் வலுவான ஆதரவாளரை" ஊக்குவித்ததற்காகவும்.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# சீன நாணயத்தை பயன்படுத்தும் இந்தியா



அரசுக்குச் சொந்தமான மிகப் பெரிய சுத்திகரிப்பு நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், ரஷ்ய எண்ணெயின் சில ஏற்றுமதிகளுக்கு யுவானில் பணம் செலுத்தியுள்ளதாக புதன் கிழமை(8) ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ரஷ்ய எண்ணெய் வழங்கும் வர்த்தகர்கள் இந்திய அரசுக்குச் சொந்தமான சுத்திகரிப்பு நிறுவனங்கள் சீன நாணயத்தில் பணம் செலுத்துமாறு கோரத் தொடங்கியதைத் தொடர்ந்து, பணம் செலுத்தப்பட்டதாக செய்தி நிறுவனம் வட்டாரங்களை மேற்கோள் காட்டி தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## எல்லைநிர்ணயம்”–”ஏக்கியஇராச்சிய” காலத்தை இழுத்தடிக்கும் கருவிகள்

பா. அரியநேத்திரன்

இலங்கை அரசியலில் சமகாலத்தில் பேசப்படும் இரண்டு சொற்களும் மிக அவசியமானதும் மிக தூரத்தில் காலத்தை கடத்தும் ஆட்சியாளர்ளுக்கான சூத்திரமாவும் கருத முடிகிறது.

மாகாணச்சபை தேர்தல் அடுத்த ஆண்டு 2026, ல் நடத்தப்படும் என்று கடந்த 09/10/2025, ல் நீதி அமைச்சர் விஜித ஹேரத் பாராளுமன்றத்தில் கூறினார்.

அவர் கூறுவதற்கான மூல காரணம் ஐநா மனித ஆணைக்குழுவின் 60, வது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் மனித உரிமை மீறல், இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி என்பவற்றுக்கு இலங்கையை அழுத்தம் கொடுப்பதை தவிர்த்து மாகாணசபை தேர்தலை நடத்த வேண்டும் என்ற வேண்டுகோளை அதில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தியா சார்பாக ஜெனிவாவில் இந்த கூட்டத் தொடரில் உரையாற்றிய இராஜதந்திரியும் மாகாணசபை தேர்தல் நடத்துவதையே வலியுறுத்தியிருந்தார்.

இந்த விடயங்களுக்கு பதில் சொல்வதாகவே 2026, ல் கட்டாயம் மாகாணசபை தேர்தல் நடத்தப்படும் என மேலோட்டமாக கூறிவிட்டு அதில் ஒரு பொறி வைத்துள்ளார் “எல்லை நிர்ணயம்” முடித்தே மாகாண சபை தேர்தல் என்றும் அந்த எல்லை நிரணயம் முடிந்த பின்னரே மாகாணசபை தேர்தல் எவ்வாறான முறையில் விகிதாசாரமுறையா? அல்லது கலப்பு முறையா? என்பதை பாராளுமன்றம் முடிவெடுக்கும் என கூறியுள்ளார்.

எல்லை நிர்ணயம் தேவையா? இல்லையா? என்பதை பாராளுமன்றம் முடிவெடுக்கும் என அவர் கூறவில்லை.

எல்லை நிரணயம் என்ற பொறிமூலம் காலத்தை இழுத்தடித்து தேசிய மக்கள் சக்தி அரசியின் செல் வாக்கை உறுதிப்படுத்திய பின்னரே மாகாணசபை தேர்தலை எதிர்பார்க்கலாம் அது பெரும்பாலும் 2026, ல் நடைபெற வாய்ப்பில்லை.

ஏனெனில் தற்போது ஒருவருட தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் தென்பகுதியில் அவர்களுடைய செல்வாக்கில் சரிவு ஏற்பட்டுள்ளது. இதற்கு நல்ல உதாரணம் கடந்த 08/10/2025, ல் கலகெதர பலநோக்கு கூட்டுறவு சங்க இயக்குனர் சபை தேர்தலில் ஏழு உறுப்பினர்கள் தெரிவில் தேசிய மக்கள் சக்தியால் போடப்பட்ட ஏழுபேரும் தெரிவாகவில்லை படு தோல்வி அடைந்துள்ளனர்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என் பதை போல் ஒரு பிரதேசத்தின் சாதாரண கூட்டுறவு சங்க தேர்தலிலே இந்த நிலை எனின் மாகாணசபை தேர்தலில் பலத்த தோல்வியை சந்திக்கலாம் என்ற அச்சம் தற்போது திசைகாட்டிக்கு ஏற்பட்டுவிட்டது அதனால்தான் “எல்லை நிர்ணயம்” என்ற சொல்லோடு காலத்தை கடத்த வாய்ப்புள்ளது.

அடுத்த விடயம் புதிய அரசியலைப்பை தாம் பதவி ஏற்று ஒரு வருடத்தில் நிறைவேற்றுவோம் என வாக்குறுதியை கடந்த 2024, ஜனாதிபதி தேர்தல், பாராளு மன்ற தேர்தல் காலத்தில் எல்லாம் தேசிய மக்கள் சக்தியால் கூறப்பட்டன.

அந்த அரசியலமைப்பில் கடந்த 2015, நல்லாட்சி அரசால் தயாரிக்கப்பட்ட வரைவில் சமஷ்டி முறை என்பதனை இல்லாமல் செய்து “ஏக்கிய இராச்சிய” என்ற சிங்கள சொல்லை உள்வாங்கியதால் அதனை தமிழர் தரப்பும் முழுமையாக ஏற்கவில்லை, சிங்கள தரப்பும் முழுமையாக ஏற்கவில்லை பின்னர் அந்த வரைவை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு திகதி ஒதுக்கிய நிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியில் இருந்த மைத்திரிபால தன்னிச்சையாக பாராளுமன்றத்தை சட்டத்துக்கு முரணாக கலைத்து புதிய அரசியல் யாப்பை நிறைவே ற்றாமல் குப்பையில் வீசினார்.

தற்போது தேசிய மக்கள் சக்தி அரசால் புதிய அரசியல் யாப்பு விடயம் பேசும் பொருளாக மாறி அண்மையில் சுவிஷ்நாட்டில் இலங்கையில் இருந்து

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## ஆசிரியர் தலையங்கம்

இலக்கு

### ஈழத்தமிழர்களின் இறைமை நீக்கத்துக்கு தேசிய நீக்கத்துக்கு ஐக்கிய நாடுகள் சபையையும் பயன்படுத்தியுள்ள அநுர அரசு

இவ்வாரம் எப்படித் தொடங்கியுள்ளது? இரண்டு வருட ஹமாஸ் இஸ்ரேலியப் போர் அமெரிக்க அரசத்தலைவர் டொனால்ட் ட்ரம்பின் 20 அம்ச திட்டத்தால் ஓய்ந்து பலஸ்தீனிய மக்கள் பெருமளவில் காசாவை நோக்கித் திரும்பத் தொடங்கியுள்ளனர். இந்நேரத்தில் சிங்கப்பூர் ஆய்வாளர் ஒருவர் கிறின் ஹவுஸ்களில் இருந்து வெளிவருபவை காலநிலை சீரழிவை ஏற்படுத்துவதை விட வெள்ளை மாளிகையில் இருந்து வெளிவருபவை அதிக பிரச்சினைகளை உருவாக்குகிறது என்பதனை கவனத்தில் கொண்டு அமெரிக்க அரசத்தலைவர் தனது நாட்டிலேயே பல பிரச்சினைகளை படைபலத்தால் தீரிக்க முயற்சிக்கும் நேரத்தில் அவரின் ஆட்சியின் பெருங்சாதனையாக எகிப்துக்கு வெற்றிப்பவனி நடாத்தி அதன் பின்னர் இஸ்ரேலுக்கும் நட்புப்பயணம் செய்யவுள்ளமையை உலகு பார்க்க வேண்டியுள்ளது. எகிப்து கட்டார் துருக்கி மட்டுமல்ல மற்றைய அரபுநாடுகளும் இஸ்ரேலின் ஆயுத பலத்தின் பின்னணியில் அதனுடான ஒருவகையான இணக்கப்பாட்டில் செயற்பட விரும்புவதை பலஸ்தீன மக்களின் அவர்களின் நிலைப்பாட்டில் காண முடிகிறது. இந்நிலையில் வல்லாண்மைகள் பிராந்திய மேலாண்மைகளின் இன்றைய புதிய நிலைகளைக் கருத்தில் கொண்டு ஈழத்தமிழர்களும் தாயகத்திலும் அனைத்துலகிலும் புதிய அணுகுமுறைகளை உருவாக்க வேண்டுமென்ற செய்தியை இந்த அமைதி ஒப்பந்தம் வெளிப்படுத்துகிறது என்பது இலக்கின் கருத்து

மேலும் கிட்டிய குடும்ப உறுப்பினர்களை இஸ்ரேல் இனஅழிப்புச் செய்த பிரிவின் வலிகளைத் தாங்கிய இதயத்துடன், இஸ்ரேலால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டு விட்ட தங்களின் நகரங்கள் கிராமங்கள் ஊர்களில் உள்ள தங்களின் வீடுகளுக்குத் தங்கள் மண்ணில் தாங்கள் வாழ்ந்தேயாக வேண்டும் என்கின்ற உள்ள உறுதியுடன் பல்லாயிரக்கணக்கில் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். இந்த அமைதித் திட்டம் நிலைக்குமா நிலைக்காதா என்ற கேள்விக்கே இடம்கொடுக்காது தாயகம் தேசியம் தன்னாட்சி என்ற தங்களில் இருந்து பிரிக்க இயலாத உரிமைகளை மண்ணில் வாழ்ந்தே நிலைநிறுத்த வேண்டுமென பலஸ்தீன மக்கள் மீண்டும் ஒரு புதிய வாழ்வை ஆரம்பிக்க உற்சாகத்துடன் வெறுங்கையராக ஆனால் வாழ்வை வெறுக்காத வீரத்துடன் ஊர் திரும்பும் காட்சியைப் பார்க்கின்ற பொழுது மகிழச்சியாகவுள்ளது. அதே நேரத்தில் அரசியல் புகலிடம் கொடுத்த நாடுகளிலேயே தங்கள் எதிர்காலத்தைத் திட்டமிட்டு வாழ்ந்து தங்கள் சந்ததிகளுக்கும் அதுவே சொர்க்கமென வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழமக்களுக்கு அவர்களின் அரசியல் இலக்குகளுக்கு உலக மக்களின் ஆதரவு ஏன் கிடைக்கவில்லை என்ற கேள்விக்கு இதன் வழி விடையும் கிடைக்கிறது.

பலஸ்தீனியர்களுக்கு தங்கள் தாய் மண்தான் தங்களுக்கு மட்டுமல்ல தங்களின் எதிர்கால சந்ததிக்கும் பாதுகாப்பான அமைதிக்கும் வளர்ச்சிக்குமான ஒரே இடம் என்கின்ற உண்மை தெளிவாகப் புரிகிறது. இதுவே அவர்களுக்கான மதிப்பும் மரியாதையுமாகி அவர்களுக்கான உலகக் குரலாக எழுகிறது. பிரான்சிய அரசத்தலைவர் அரேபிய வெளிநாட்டு அமைச்சர்களை அழைத்து இருதேசத் தீர்வே எட்டப்பட வேண்டியது, தற்காலிகமாக பலஸ்தீனிய மக்களின் இன்றைய துன்ப வாழ்வு குறைந்தாலும் பலஸ்தீனத் தேசத்தன்மை இருதேசத் தீர்வால் உறுதிப்படுவது எதிர்காலப் பாதுகாப்புக்கு அவசியம் என்பதைத் தெளிவாக்கியுள்ளார். இதன் மூலம் அனைத்துலக நாடுகளையும் இஸ்ரேல் பலஸ்தீனியர்களின் இறைமை நீக்கத்துக்கும் தேசிய நீக்கத்துக்கும் தன்னாட்சி நீக்கத்துக்கும் பயன்படுத்த முயற்சிப்பதை அரபுநாடுகள் உணரக்கூடிய வாய்ப்புத் தோன்றியுள்ளது. ஆனால் ஈழத்தமிழர்களுக்கு அவர்களின் இறைமை நீக்கத்துக்கும் தேசிய நீக்கத்துக்கும் தாங்கள் தங்களின் மண் மேலான இறைமையின் அடிப்படையில் தங்களின் அரசியல் கோரிக்கைகளைக் கட்டமைக்காததே காரணம் என்பதையும் இந்த செய்திகள் உணர்த்த வேண்டுமென்பதே இலக்கின் எண்ணம்.

மேலும் ஐக்கிய நாடுகள் சபையின் 192 நாடுகளில் 143 நாடுகள் தேசமாகவே பலஸ்தீனத்தை அங்கீகரித்த நிலையிலும் பாதுகாப்புச் சபையின் ஐந்து நாடுகளில் நான்கு நாடுகள் பலஸ்தீனத்தை ஏற்ற நிலையிலும் ஒருநாட்டின் ரத்து அதிகாரத்தால் பலஸ்தீனிய மக்கள் தங்களுக்கான தங்களின் தேசத்தில் தங்களுக்கான தன்னாட்சியை அமைக்கவியலாது இத்தனை மனிதத் துன்பங்களுக்குப் பின்னரும் இஸ்ரேலின் இறைமைக்குள் உள்ளடங்கும் பலஸ்தீன அதிகாரசபையின் ஆட்சியின் புதிய வடிவான ட்ரம்பின் பலஸ்தீனத்தின் தனியாட்சி நிலையை மீளவும் தடுத்த ஆட்சி முறைமைக்குள் வாழத்தயாராக பலஸ்தீன மக்கள் தங்கள் மண் நோக்கி இவ்வாரத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்றனர். இதுதான் வள்ளுவர் கூறிய ஒப்புரவாதல். அதாவது உலக நடையறிந்து ஒழுகுதல். உணர்ச்சிக்குப் பலியாகாது உணர்வு பூர்வமாக அறிவார்ந்த முறையில் தங்கள் வாழ்வை தங்கள் மண்ணில் மீளவும் கட்டியெழுப்பி தேசநிர்மாணத்தைச் செய்து தங்களுக்கான தாயக தேசிய தன்னாட்சியை மீளப் பெறுவதற்கான அடுத்த கட்டப் போராட்டத்தை நோக்கி பலஸ்தீனிய மக்கள் நடக்கத் தொடங்கி விட்டனர். அவர்களுடைய உறுதியின் உறைவிடமான அவர்களின் உள்ளத்துக்கு இலக்கு தலைவணங்குகிறது.

அவர்களின் விழ விழ எழுவோம் என்னும் தளராத உழைப்பு முயற்சிக்கு இலக்கு இருகரம் தட்டி வரவேற்கின்றது. இலட்சியம் அசையாத உறுதியுடன் உள்ளத்தில் இருக்க வேண்டும். மாறும் உலகின் மாற்றங்களுக்கு ஏற்ப காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ற வாழ்வை அமைக்க வேண்டும். அப்பொழுதுதான் வாழ்ந்து இலட்சியத்தை அடையலாம். இல்லையேல் எதிரியின் நோக்கான வாழ்வை இழந்து இலட்சியத்தையும் அழியவிட வேண்டி வரும். இவற்றை இங்கு எழுதுவதன் நோக்கம் ஈழத்தமிழர்களின் தேசியப் பிரச்சினையும் பலஸ்தீன மக்களின் தேசியப் பிரச்சினையும் 1948 இல் பிரித்தானிய காலனித்துவ அரசால் உருவாக்கப்பட்டு காலனித்துவத்தால் தீர்க்கப்படாத பிரச்சினையாக இன்று மட்டும் தொடர்கின்ற உலகப்பிரச்சினை. ஆயினும் இரண்டையுமே வல்லாண்மைகளும் பிராந்திய மேலாண்மைகளும் தங்களின் பாதுகாப்பு பொருளாதாரத் தேவைகளுக்காகப் பயன்படுத்துகின்றனர் என்பது வெளிப்படையான உண்மை. அதிலும் 09.10. 2025 இல் பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் 09.10. 1945 இல் தாங்கள் 1833 முதல் 115 ஆண்டுகளாகத் தம் விருப்பப்படி ஒரே நாடாக ஆண்ட சிலோன் என்னும் அரசுக்கு சுதந்திரத்தை வழங்குவதற்காகத் தாம் 18.11. 1944 இல் நியமித்த சோல்பரி ஆணைக்குழுவின் அரசியலமைப்பு குறித்த அறிக்கையைப் பிரித்தானியப் பாராளுமன்றத்தில் வெளியிட்டனர். அன்று முதல் இன்று வரை 80 ஆண்டுகள் ஈழத்தமிழர்கள் பிரித்தானியர் கைப்பற்றிய யாழ்ப்பாண வன்னிய அரசுக்களின் இறைமையைத் தாங்கள் மீளவும் மீளுறுதி செய்யும் தேசிய விடுதலைப் போராட்டத்தை சிங்கள அரசாங்கங்களின் இனஅழிப்புக்களிடை சனநாயக வழிகளில் தொடர்ந்த வண்ணம் உள்ளனர்.

இதற்கிடை சிறிலங்கா இம்முறை மனித உரிமைகள் பேரவையில் சிறிலங்கா குறித்த தீர்மானத்துக்கான வாக்கெடுப்பைக் கோராது விட்டதன் மூலம் தாங்கள் அனைத்துலகத்தை முழுஅளவில் வென்று விட்டதாக அதன் ராஜதந்திரி ஒருவர் வீரகேசரிக்குச் செவ்வி வழங்கியுள்ளார். தீர்மானத்தை முன்வைத்த பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளும் சிறிலங்காவின் புதிய நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் முன்னெடுப்புகளுக்கு முழு அளவில் ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் ஐரோப்பிய நாடுகளும் தமக்கான ஆதரவுநாடுகளாக மாறியுள்ளதாகவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார். சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சரும் தனது முழுமுயற்சியையும் நீதியான விசாரணையை விடுத்து சிறிலங்காவின் குற்றமிழைத்த படையினரைக் காக்கக் கூடிய வகையிலேயே ஐக்கிய நாடுகள் சபையில் எடுத்துள்ளமையை அவரின் பேச்சுக்களே வெளிப்படுத்தி வருகின்றன. இவ்வாறான முயற்சிகள் வழியாக ஈழத்தமிழர்களின் இறைமை நீக்கத்துக்கும் தேசிய நீக்கத்துக்கும் ஐக்கிய நாடுகள் சபையை அநுர அரசு பயன்படுத்தியுள்ளமை தெளிவாகிறது.

மேலும் மன்னார் ஆயர் சிறிலங்காவின் அரசத்தலைவரை சந்தித்ததின் பின்னர் 14 காற்றலைகளையும் நிறுவும் முயற்சியில் அவர் மக்கள் போராட்டங்களுக்கு மதிப்பளித்து இம்மி கூட நகரமாட்டார் என்பதையும் வடக்கு கிழக்கு மக்கள் முழுப்பேரையும் ஒன்றிணைத்த மக்கள் போராட்டங்கள் வழியாகவே ஏதாயினும் மாற்றத்தை ஏற்படுத்தலாம் எனவும் செய்தியாளர்களுக்கு விளக்கியுள்ளார். தாயகத்திலும் சரி அனைத்துலகிலும் சரி ஈழத்தமிழர்கள் ஒன்றிணைந்து சனநாயக வழிகளில் செயற்பட வேண்டிய தேவை இப்பொழுது முக்கியத்துவம் பெறுகிறது என்பதே இலக்கின் இவ்வாரக் கவனப்படுத்தலாகவுள்ளது.

அத்துடன் இந்தியா ஆப்கானிஸ்தானின் வெளிவிவகார அமைச்சரை டில்லிக்கு அழைத்து உதவிகளை வாரி வழங்கி இன்னும் நாலு ஆண்டுகளில் தனது தூதரகத்தை ஆப்கானிஸ்தானில் திறக்கவும் முடிவு செய்துள்ளமை இந்தியாவுக்கு மத்திய ஆசியாவுக்கான நுழைவாயிலாக ஆப்கானிஸ்தானை கட்டமைக்க வேண்டிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதை வெளிப்படுத்துகிறது. இந்நேரத்தில் குளோபல் சவுத்துடைய ஆணிவேராக ஈழத்தமிழினத்தை அதற்குரிய இடத்தை அளித்து இந்தியாவால் மாற்ற முடியும் என்ற உண்மையை ஈழத்தமிழர்கள் இந்தியாவுக்கு உரையாடல்கள் மூலம் ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் ஈழத்தமிழரின் இறைமை நீக்கம் தேசிய நீக்கம் தெற்காசியாவில் குளோபல் சவுத்துக்கு எதிரான எத்தகைய தீய விளைவுகளை மற்றைய நாடுகள் ஏற்படுத்தக் கூடியவொன்றாக அமைந்து விடும் என்ற உண்மை உணரப்படும் என்பதும் இலக்கின் கருத்தாகவுள்ளது.

**ஆசிரியர்**



# இலங்கை எதிர்க்கும் ஐ.நா.தீர்மானம்

## தமிழர்களுக்கான வெற்றியல்ல

விதுரன்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட 60-1 தீர்மானம், இலங்கை தொடர்பான சர்வதேச கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் முயற்சிகளில் நிலவும் முரண்பாடுகளைத் தெளி வாகப் பிரதிபலிக்கிறது. இத்தீர்மானம் ஒருபுறம் இலங்கைக்கு சர்வதேச அழுத்தத்தைத் தக்கவைத்துள்ள போதும், மறுபுறம் பாதிக்கப்பட்ட வர்களின் நீண்டகால நீதிக் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வலுவானதாக இல்லை.

இந்தத் தீர்மானம், இதற்கு முந்தைய, குறிப்பாக 2015ஆம் ஆண்டின் 30-1 தீர்மானத்துடன் ஒப்பிடும்போது, தீவிரத் தன்மையில் பலவீனமாக உள்ளது. 30-1 தீர்மானம், வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களை உள்ளடக்கிய கலப்பு விசாரணைப் பொறிமுறைக்கு அழுத்தம் கொடுத்தது.



ஆனால், 60-1 தீர்மானம் ஒரு சுயாதீன உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை உருவாக்க மட்டுமே வலியுறுத்தியதுடன், அதில் வெளிநாட்டு நிபுணர்களின் பங்கேற்பை கட்டாயப்படுத்தவில்லை. இந்த நீர்த்துப்போன தன்மைக்கு முக்கியமாக இரண்டு காரணிகள் பங்களித்தன:

அதில் முதலாவது, இலங்கையின் உள்நாட்டு பொறிமுறை வாக்குறுதியாகும். அதாவது, இலங்கை அரசாங்கம் ஆட்சிக்குப் புதியவர்களாக இருந்து கொண்டு பொறுப்புக்கூறல் பிரச்சினைகளுக்கு உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலம் தீர்வு காணப்படும் என்று அளித்த வாக்குறுதி, வெளிநாட்டுத் தலையீடுகளைக் கோரும் கடுமையான பொறிமுறைகள் தீர்மானத்தில் சேர்க்கப்படுவதைத் தடுத்து நிறுத்தியிருக்கின்றது.

இரண்டாவது, இராஜதந்திர சமரசங்களாகும். குறிப்பாக, அமெரிக்கா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இருந்து வெளியேறிய சூழலில், இத்தீர்மானத்தை வெற்றிகரமாக நிறை வேற்ற வேண்டிய நிர்பந்தத்தில் இருந்த பிரிட்டன் மற்றும் கனடா போன்ற இணை அனுசரணை நாடுகள், இராஜதந்திர ரீதியில் பல விட்டுக்கொடுப்புகளுக்கும் சமரசங்களுக்கும் உட்பட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருந்தன. விசேடமாக புதிய தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் வரைவில் மூன்று முறை மாற்றங்கள் செய்யப்பட்டு, மிகக் கடுமையாகக் காணப்பட்ட அற்பசொற்ப விடயங்களும் நீக்கப்பட்டன.



இதன் விளைவாகவே, தீர்மானம் நீதியையும் பொறுப்புக்கூறலையும் எதிர்பார்த்து நிற்கும் தமிழ்த் தரப்பினருக்கு ஏமாற்றத்தை அளிப்பதாக இருப்பதோடு நிரந்தரமான நல்லிணக்கத்திற்கான பலமான அடிப்படையை இது கொண்டிருக்கவில்லை என்றும் நேரடியாகவே வெளிப்படுத்துவதற்கு வித்திட்டுள்ளது.

இதேவேளை, தீர்மானம் அதன் உள்ளடக்கத்தில் பலவீனமாக இருந்தாலும், இலங்கையின் கடும் எதிர்ப்பையும் மீறி முக்கியமான ஒரு விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தின் ஆணை மேலும் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.



இலங்கை அரசாங்கம் சீனா, கியூபா, எதியோப்பியா போன்ற நட்பு நாடுகளுடன் இணைந்து, இச்செயற்திட்டத்தை ஒரு நிதியை வீணடிக்கும் செயற்பாடு என்று கடுமையாக விமர்சித்தது.

எனினும், இத்தீர்மானம் 51-1 தீர்மானத்தின் ஆணையைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதன் மூலம், மறைமுகமாக இந்தச் செயற்திட்டத்தின் ஆணையைப் புதுப்பித்தது. இந்த நீடிப்பு, போர்க்குற்றங்கள் தொடர்பான ஆவணங்கள் மற்றும் ஆதாரங்கள் அழிக்கப்படுவதற்கோ அல்லது செயலிழப்பதற்கோ இருந்த ஆபத்தைத் தடுத்து நிறுத்துவதில் பிரித்தானியாவின் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

இரண்டு ஆண்டுகள் கண்காணிப்பு நிலையில் இருந்து விடுபடும்போது சான்றாதாரங்கள் அழிந்து போகும் துரதிஸ்டமான நிலை நிகழக்கூடும் என்ற அச்சம் வெளிப்படுத்திய ஐ.நாவுக்கான பிரித்தானிய தூதுவர் குமார் ஐயர், நீதிக்காகப் போராடி காலமான மருத்துவர் மனோகரன் பற்றிய உணர்வுப்பூர்வமான விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் அவர், நீதியைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சிகள் அவசரமானவை, அவசியமானவை என்று பேரவையில் வலியுறுத்தியமை, தீர்மானத்தை இடைநிறுத்த கோரியிருந்த இலங்கையின் கோரிக்கையை வலுவிழக்கச் செய்தது. இந்த ஆணை நீடிப்பு, இலங்கையை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ஐ.நா. உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் தொடர்ச்சியான கண்காணிப்பில் வைத்திருப்பதற்கான வழியை உருவாக்கியுள்ளது.



அதேநேரம், ஐ.நா.தீர்மான விடயத்தில் இலங்கை அரசாங்கம் கடைப்பிடித்த முரண்பட்ட நிலைப்பாடு கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது. அவ்விதமான முரண்பட்ட நிலைப்பாட்டை இராஜதந்திர நகர்வென்று அரசாங்கம் கூறுகின்றமை வேடிக்கையானது.

ஐ.நா தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் அதன் உள்ளடக்கங்களை தாம் நிராகரிப்பதாக ஐ.நா.வுக்கான இலங்கையின் வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி அருணதிலக்க உத்தியோக பூர்வமாக அறிவித்தார். மறுபுறம், அதனைத் தோற்கடிப்பதற்காக வாக்கெடுப்பை கோரவோ அல்லது நட்பு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்



# 1983, கறுப்பு யூலைக்கு 2025 ல் நீதிக்கான அழைப்பு..!

பா. அரியநேத்திரன்

இரண்டு விளம்பரங்களை பார்த்தேன் 1983 கறுப்பு யூலையின் நினைவும், நீதிக்கான அழைப்பும் என்ற தலைப்பிட்டு நந்தன வீரரத்தன வின் சிங்கள மொழியிலான புத்தகத்தை மனோ ரஞ்சனின் தமிழ் மொழிபெயர்பில் கடந்த வியாழன் 2025 செப்டம்பர் 09 ல் கொழும்பு மகாவலி மைய கேட்போர் கூடத்திலும், இன்று சனிக்கழமை 2025 செப்டம்பர் 11ல் யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கிலும் ஜனநாயக உரிமைக்கான மக்கள் ஒன்றியம் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் இடம் பெற்றது.



இதில் சிந்திக்க வேண்டியது இரண்டுவிடயங்கள் முதலாவது 42 வருடங்கள் கடந்து 1983 கறுப்பு யூலை நினைவு நிகழ்வில் ஜே வி பி செயலாளர் ரில்வின் சில்வா கலந்து உரையாற்றுவது.

இரண்டாவது யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நிகழ்வில் ஈபிஆர்எல்எவ் பத்மநாபா அணி செயலாளர் சுகு எனப்படும் சிறிதரன் தலைமை தாங்குவது.

ஈபிஆர்எல்எவ் பத்மநாப அணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இடம் கிடைக்காத நிலையில் 2010ல் தமிழ் சமூக ஜனநாயக கட்சி என்று பெயரை வரதராஜப்பெருமாள் தலைமையிலான பத்மநாபா ஈபிஆர்எல்எவ் அணி மாற்றியது அதன் செயலாளர் சுகு சிறிதரன்.



புத்தகங்கள் எழுதுவது வெளியிடுவது எல்லாம் நல்ல விடயம் புத்தக வெளியீட்டில் "நீதிக்கான அழைப்பு" என விளம்பரங்களில் குறிப்பிட்டுள்ளது யாரிடம் யார் நீதிகேட்பது இனப்படுகொலைகளுக்கான நீதி என்பது சர்வதேசத்தை நோக்கியதாகவே கடந்த 16 வருடங்களாக ஈழத்தமிழர்களின் ஒருமித்த குரலாக இருக்கும் வேளையில் 1983 கறுப்பு யூலைக்கு 2025 ல் உள்நாட்டில் நீதி கேட்க இவர்கள் யார்.?

மாகாணசபை தேர்தல் கிடப்பில் போடப்பட்ட நிலையில் மீண்டும் அடுத்த வருடம் மாகாணசபை தேர்தல் இடம்பெறும் என தற்போதைய அரசில் உள்ள அமைச்சர்கள் கதை கூறும் நிலையில் 1983 கறுப்பு யூலை புத்தக வெளியீடும் அதில் கலந்து கொள்ளும் தலைமை தாங்கும் கட்சி உறுப்பினர்களையும் பார்க்கும் போது மாகாணசபை தேர்தலில் போட்டியிடும் முன் ஏற்பாடாகவும் இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.


வரதராஜப்பெருமாளும் அண்மையில் அக்கரைப்பற்றில் தேசிய காங்கிரஷ் கட்சி தலைவர் அதாவுல்லாவுடனும்,யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சி பதில் செயலாளர் சுமந்திரனுடனும், மட்டக்களப்பில் அவருடைய பழைய தோழர் தற்போது தமிழர் மகாசபை கட்சி தலைவர் த. கோபாலகிருஷ்ணன்ஆகியோருடன்தனித்தனியாக நின்று படம் எடுத்து சமூகவலைத்தளங்களில் காட்டப்பட்டதும் மாகாணசபை தேர்தலில் போட்டியிடும் அறிகுறிதான்.



இணைந்த வடகிழக்கு மாகாணசபையின் 1988ல் முதலமைச்சராக இருந்த வரதராஜப் பெருமாளுடன் செயல்பட்ட சுகு எனப்படும் சிறிதரன் 42, வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் நடந்த கறுப்புயூலை இனப்படுகொலை நினைவு நிகழ்வில் யாழ்ப் பாணத்தில் தலைமைதாங்கி உரையாற்றுகிறார்.

கொழும்பில் நடந்த நிகழ்வில் மட்டும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே வி பி) கட்சியின் செயலாளர் அதாவது தற்போதைய தேசிய மக்கள் சக்தி கட்சியின் தீர்மானங்களை, கொள்கைகளை வகுக்கும் செயலாளர் ரில்வின் சில்வாவும் உரையாற்றுகிறார்.

1983 யூலைக்கலவரம் என்பது கொழும்பு தலைநகரிலும், தென்பகுதிகளில் சில இடங்களிலும் உள்ள தமிழ் மக்களை திட்டம் இட்டு இனப்படுகொலை செய்த கொடூர படுகொலை



களாகும்.

1983 யூலை 24 இரவு, தலைநகர் கொழும்பில்தமிழர்களுக்குஎதிரானகலவரம்தொடங்கியது, பின்னர் நாட்டின் பிற பகுதிகளுக்கும் பரவியது. ஏழு நாட்களில், முக்கியமாக சிங்களக் கும்பல்கள் தமிழரைத் தாக்கின, உயிருடன் எரித்தன, படுகொலைகள் புரிந்தன, உடமைகளைக் கொள்ளையடித்தன. இறப்பு எண்ணிக்கை 400 முதல் 3,000 வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டது, 150,000 பேர் வீடற்றவர்களாயினர். ஏறத்தாழ 8,000 வீடுகளும், 5,000 வணிக நிறுவனங்களும் அழிக்கப்பட்டன. இக்கலவரத்தின் போது ஏற்பட்ட மொத்தப் பொருளாதாரச் செலவு பத்தாயிரம் கோடி என மதிப்பிடப்பட்டது. பன்னாட்டு நீதித் துறை வல்லுநர்கள் ஆணையம் என்ற அரச-சார்பற்ற அமைப்பு 1983 டிசம்பரில் வெளியிட்ட அறிக்கையில் இப்படுகொலைகளை ஒரு இனப்படுகொலை என்று விவரித்தது.

அப்போது ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. 1983 யூலை 27ல் ரூபவாகினி தொலைக்காட்சியில் தோன்றிய ஜே.ஆர் ஜெயவர்தன பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எந்தவித அனுதாபமும் தெரிவிக்காமல் கடந்த சில நாட்களாக நடைபெற்ற அசம்பாவிதங்கள் சிங்கள மக்களது இயல்பான மன உணர்வுகள் எனக் கருத்து வெளியிட்டார். இதைத் தொடர்ந்து 1983 யூலை 29 விடுதலைப் புலிகள் கொழும்புக்கு வந்துவிட்டார்கள் என்ற வதந்தி பரப்பப்பட்டது. அன்றைய தினம் மேலும் பல தமிழர்கள் கொல்லப்பட்டார்கள்.

அந்த இனப்படுகொலைகளுக்கு ஜே வி பி உட்பட எந்த சிங்களக் கட்சிகளும் கண்டனங்களையோ, அனுதாபங்களையோ தெரி தெரிவிக்கவில்லை, சர்வதேச நாடுகள், தமிழ் தலை வர்கள் என பலருடைய அழுத்தம் காரணமாக 1983 இல் இடம் பெற்ற இனக்கலவரத்தைப் பற்றிய ஒரு விசாரணையை அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசாங்கம் ஒரு ஆணைக்குழுவை நியமித்தது. இக்குழுவானது கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம் என்று எல்லா இடங்களுக்கும் சென்று விசாரணையை

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# சம்பூரில் சூரிய மின்சக்தி உற்பத்தியால்
# விவசாய நிலங்களை இழந்த விவசாயிகள்



கிண்ணியான்

அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டம் என்ற போர்வையில் வடகிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் விவசாய நிலங்களும் அபகரிக் கப்பட்டு வருகின்றன. வட கிழக்கு மாகாணத்தில் இந்த நிலை தமிழ் பேசும் மக்களை குறி வைத்து நில அபகரிப்பு தொடர்கிறது. இதில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சம்பூர் கிராம மக்களும் எதிர்கொண்டுள்ளனர். சூரிய மின் சக்தி திட்டம் என்ற போர்வையில் குறித்த மக்களின் விவசாய காணியும் கபளீகரம் செய்யப்பட்டுள்ளதாக அப் பகுதியில் வசிக்கும் வாழ்வாதாரத்தை இழந்த விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.




சம்பூரில் கடந்த கால அரசாங்கம் மூலமாக அனல் மின்சார நிலைய உற்பத்தியை ஆரம்பிக்க இருந்த போதிலும் மக்களின் பலமான எதிர்ப்பி னால் அதனை கைவிட்டார்கள்.

தற்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஊடாக சூரிய ஒளியில் இருந்து மின்சாரத்தை தயாரிப்பதற்கான சூரிய மின் உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்திய பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட நிலையில் மெய்நிகர் வழியாக இதனை ஆரம்பித்து வைத்தார்.



திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சம்பூர் கிராமத்தில் சூரிய மின்சக்தி திட்டம் என்ற போர்வையில் மக்களின் விவசாய நிலங்கள் கபளீகரம் செய்யப்பட்டுள்ளதாக அப்பகுதியில் வசிக்கும் வாழ்வாதாரத்தை இழந்த விவசாயிகள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர். "இலங்கை இந் தியா இடையிலான நூற்றாண்டு நட்புறவின் வள மான எதிர்காலத்திற்கான உறுதிப்பாடு "எனும் கருப்பொருளின் கீழ் மொத்தமாக வலுசக்தி, டிஜிடல் மயமாக்கல், பாதுகாப்பு ,சுகாதாரம் உள் ளிட்ட ஏழு ஒப்பந்தங்கள் இதன் போது பாரதப்பிரதமர், ஜனாதிபதி அனுர குமார ஆகியோருக் கிடையில் கைச்சாத்திடப்பட்டன.



குறித்த பகுதியில் இந்த திட்டத்தை மேற்கொள்வதற்காக கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரட்ணசேகர அங்கு சென்று பார்வையிட்டு சென்றார் இது இவ்வாறு இருக்க இதனை தடுக்கக்கோரியும் தங்கள் காணிகளை தங்களுக்கு வழங்க வேண்டும் என கோரியும் ஆளுனர் செயலகம் முன்பாக மக்கள் கவனயீர்ப்பிலும் அண்மையில் ஈடுபட்டதுடன் மஹஜரையும் கையளித்த நிலையில் எவ்வித தீர் வும் இன்றிய நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளதுடன் விவசாய செய்கைகளையும் கைவிட்டுள்ளார்கள்.



குறித்த சூரிய மின் சக்தி திட்டத்தை இந்தியாவின் தேசிய அனல் மின் கூட்டுத்தாபனம் *(NTPC)* லிமிடெட் மற்றும் இலங்கை மின்சார சபை *(CEB)* ஆகியவற்றின் கூட்டு முயற்சியான திருகோணமலை மின்சார நிறுவனத்தால் நிர்மாணிக்கப்படவுள்ள சம்பூர் சூரிய மின் நிலையம், நீண்டகால மின் உற்பத்தி திட்டமாகும்.

இவ் விரிவாக்கத் திட்டத்தின் *(LTGEP)* கீழ் நிறுவப்படவுள்ள வடகிழக்கு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி வலயத்தின் ஒரு பகுதியாக இது காணப் படுகிறது.

சம்பூர்சூரியமின்நிலையத்திட்டம்இரண்டு கட்டங்களாகத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இரண் டாம் கட்டம் 2027 இல் தொடங்க திட்டமிடப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்காக 500 ஏக்கர் பரப்பளவு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் 50 மெகாவாட் மின்சாரம் நாட்டின் தேசிய மின்சார விநியோகத்தில் இணைக்கப்படும்.

*N-type TOPCon solar cells* என்ற நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிறுவப்படும் இந்த திட்டம், வலுசக்தி பாதுகாப்பை அதிகரிக்கும் என்றும், நாட்டின் வலுசக்தி அமைப்பை புதை படிவ எரிபொருட்களை நம்புவதற்குப் பதிலாக புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை நோக்கி மாற்றும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் அப் பகுதியில் உள்ள மக்கள் வாழ்வாதாரமாக விவசாயம்,சேனைப் பயிர்ச் செய்கை, தோட்டம், கால் நடை வளர்ப்பு என பல அன்றாட ஜீவனோபாய தொழிலாக கொண்டு வாழ்ந்து வந்த நிலையில் பெரியளவில் தற்போது முடக்கப்பட்டுள்ளது. சம்பூர்,கடற்கரைச்சேனை, சந்தோசபுரம், சூடைக்குடா, நவரட்ண புரம், சம்புக்களி போன்ற கிராம மக்கள் இதன் மூலம் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஐந்துக்கும் மேற் பட்ட நீர்ப்பாசன குளங்களும் உள்ளடக்கப்பட்டுள் ளன.




ஆரம்ப கால கட்டத்தில் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் யுத்த நிலையின் பின் உயர் பாதுகாப்பு வலயம் என கூறி கடற்படை முகாமிட்டு அங்குள்ள விவசாய காணிகள் உட்பட மக்களது தனியார் நிலங்கள் பறிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

சூரிய மின் சக்தி திட்டம் காரணமாக விக்னேஸ்வரா சம்மேளனம், இறைமதி சம்மேள னம், வளர்மதி சம்மேளனங்களை சேர்ந்த சம்புக்குளம்,இலுப்பை குளம், புலவன் குளம், ஆனைக்கன் குளம், பூலாவடிக்குளம் போன்ற விவசாய குளங்களும் சூறையாடப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# ஐநா மனித உரிமை ஆணையத்தின் 60வது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட இறுதித் தீர்மானம்

**ஐ.நா. தீர்மானம் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது, அதில் உள்ள குறைபாடுகள் என்ன, மற்றும் ஏன் அது ஈழத் தமிழர்களுக்கு எதிரானதாகக் கருதப்படுகிறது?**

இந்த தீர்மானம் *(Resolution)* ஐ.நா. மனித உரிமை கவுன்சிலின் 46வது அமர்வின் தொடர்ச்சியாக வந்த ஒன்று. “ஸ்ரீலங்கா அக் கவுண்டபிலிட்டி ப்ராஜெக்ட்” *(SLAP)* என்ற வெளிப்புற ஆதாரச் சேகரிப்பு அமைப்பின் *(External Evidence Gathering Mechanism)* பணியை நீடிப்பது இதன் முக்கிய நோக்கம். இலங்கை இதனை “இன்சல்டிங்” எனக் குறிப்பிட்டு, கடுமையாக எதிர்த்தது. இதன் செயற்பாடு இலங்கையின் ஒப்புதலின்றி நடப்பதாகவும், தங்களின் உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையீடு எனவும் கூறினர்.

2024ல் இது மீண்டும் விவாதத்திற்கு வந்தது; 2025 செப்டம்பர் அமர்வில் இதற்கான வாக்கெடுப்பு நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வாக்கெடுப்பில்லாமல் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக இது நல்லதா, கெட்டதா என்ற குழப்ப நிலை ஏற்பட்டது. தீர்மானம் *“Promoting Accountability in Sri Lanka”* என்ற பெயரில் வர, இலங்கை அதனை எதிர்க்கிறது.

இலங்கை பக்கம், “மிலிட்டரிசேஷன்”, “எத்னிக் கான்பிளிக்ட்”, “மாஸ் கிரேவ்” போன்ற சொற்கள் நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியது. இது பயங்கரவாதத்துக்கு எதிரான போராகவே பார்க்கப்பட வேண்டும் என்றும், ஆபீஸின் பரிந்துரைகளை “இம்ப்ளிமென்ட்” செய்ய தேவையில்லை என்றும் தெரிவித்தது. அதனால், ஸ்லாப் மெக்கானிசத்தை நீட்டிக்கும் பரிந்துரைக்கு இலங்கை கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தது, இதனை தலையீடாகக் கருதியது.

**இந்த தீர்மானத்திற்கு எதிராக ஐ.நாவில் உள்ள தமிழர் செயற்பாட்டாளர்கள் என்ன நடவடிக்கைகள் எடுத்தனர்?**

ஜூலை முதல் நாங்கள் 70 எழுத்து மூல அறிக்கைகள் சமர்ப்பித்தோம்; அதில் 40 சரிபார்க்கப்பட்டு வெளியிடப்பட்டன. அவை மாஸ் கல்லறைகள் உள்ளிட்ட உண்மைகளை வலியுறுத்துகின்றன. இந்த *validated* அறிக்கைகள் சிவில் சமூகத்தின் நிலைப்பாட்டுக்கான முக்கிய ஆதாரமாக இருந்து, தீர்மானங்கள் மற்றும் வாய்மொழி அறிக்கைகளுக்கான அடிப்படையாக செயல்படுகின்றன.

**நேயர்களுக்கு அதை நீங்கள் சுருக்கமாக, எழுத்து மூல அறிக்கையில் இருக்கிற விடயங்களை சுருக்கமாக சொல்லுங்கள்.**

சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஜீரோ டிராப்டை வரவேற்றனர்; அதையும் சில அமைப்புகள் பாராட்டின. இது கவலைக்குரிய அரசியல் நிலையை காட்டுகிறது.

**HRC 60/L.7 தீர்மானத்தில், கலாச்சார பிரான்ஸ் அமைப்பும் அதனுடன் இணைந்த அமைப்பும் முன்வைத்த ‘செம்மணி பொதுக் கல்லறை மற்றும் The Voice of the Tamil Mothers’ குறித்து கூறிய விஷயம் என்ன?**

எங்களுடைய அமைப்பு 21வது அமர்விலிருந்தே மனித உரிமை மீறல்கள் குறித்து அறிக்கைகள் வழங்கி வருகிறது. 2025 ஜூலையில் 40 எழுத்து மூல அறிக்கைகள், மன்னார் *“Greenwashing Genocide”* போன்ற விவரங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டன. 30க்கும் மேற்பட்ட அமைப்புகள் இணைந்து கூறியவை சிவில் சமூக குரலாக எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆனால் தீர்மானங்களில் “தமிழர்” என்ற சொல் கூட இடம் பெறவில்லை.

**இந்த தீர்மானத்தின் முக்கிய உள்ளடக்கம் என்ன? முன்பு இருந்த 57 தீர்மானத்தின் அம்சங்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளனவா?**

அதில் இலங்கையின் அதிபரிச் சுயாதீனத்தையும் அனைவரின் மனித உரிமைகளைக்காக்கும் நோக்கத்தையும் கொண்டு, 2024 செப்டம்பர், நவம்பர் மற்றும் 2025 மேல் நடைபெறும் தேர்தல்களை வரவேற்கிறது. இது இலங்கை அரசை 13 ஆம் திருத்தம் போல அரசியல் ஆதாரிட்டியை மாற்றி, பிராந்திய மறுவிதிவாதத்தை *(devolution)* முன்னெடுக்கச் சொல்லுகிறது. பொறுப்புப்படுத்தல் *(accountability)* மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான பாதுகாப்பு தேவையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது; குழந்தைகள் பாதுகாப்பு, பால்பிரிவினை அடங்கிய இடர் நீக்கம், மற்றும் அனைத்து தரப்பினரும் ஈடுபடவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. ஆனால் சில முக்கிய சொற்கள் (தமிழர்கள், மிலிட்டரி அல்லது இனப்படுகொலை போன்றவை) தேர்விலே இல்லை; அரசு இதனை குடும்பப் பிரச்சனை என்று நிரூபிக்க முயல்கிறது.

**அப்ப நீங்க கேட்ட கேள்வி, நீங்கள் சுமந்திரன் ஐயாவை அவங்கள சொல்லி சொல்றீங்களா?**

இவர் கூறுவது-தாம் பார்த்ததும் கேட்டதுமே அடிப்படையாகக் கொண்ட உண்மையான நிலைப்பாட்டை பகிர விரும்புகிறார். ஜீரோ டிராப்ட் வந்தபின் அதையும் நாங்கள் வாசித்து, ஆராய்ந்தோம். மீடியாவாக நம் கடமை உண்மையான தகவலை மக்களிடம் கொண்டு சேர்ப்பதே. அதற்காகவே ஐ.நா.வில் நேரடியாக பணியாற்றும் செயற்பாட்டாளர்களை மக்களுடன் இணைக்க முயல்கிறோம். நாங்கள் எங்கள் எழுத்து மற்றும் வாய்மொழி அறிக்கைகளில் ஆதங்கங்களையும் உண்மைகளையும் பதிவு செய்துள்ளோம்.

***ஜீரோ டிராப்டின் 14 பராகிராப்களில் முக்கியமாக மூன்று அம்சங்களை அவர் சுட்டுகிறார்:***

1. *ஹை கமிஷனரின் அறிக்கையை வரவேற்கின்றனர்.*
2. *இலங்கையில் நடந்த உரையாடலை பாராட்டுகின்றனர்.*
33. *பொருளாதாரத் தவறான மேலாண்மை பற்றிய குறிப்பு — இதை அவர் கடுமையாக எதிர்க்கிறார்.*

இலங்கையில் நடந்தது பொருளாதாரத் தவறல்ல, அது கட்டமைப்பு சார்ந்த இனப்படுகொலை என்று அவர் வலியுறுத்துகிறார். “எத்னிக்” என்ற சொல்லை நீக்கி, “பொருளாதாரம்” போன்ற சொற்கள் சேர்க்கப்பட்டதையும் குற்றம் சாட்டுகிறார். மேலும் “இனவாத அரசியலை மீண்டும் கொண்டு வரக்கூடாது” என்ற வரியை அவர்கள் எதனை நோக்கி சொல்கிறார்கள்-பௌத்த பேரினவாத அரசையா அல்லது தமிழர் உரிமைக் காக போராடுவோரையா-என்ற கேள்வி எழுப்பு கிறார்.

இறுதியில் அவர் கூறுவது — இது புதிய அரசு அல்ல, பழைய இனஅழிப்பு அரசியலின் தொடர்ச்சி தான் என்பதுதான் உண்மை.

**வாக்கெடுப்பு இல்லாமலிருந்தாலும், இந்த தீர்மானத்தைப் பற்றி நடந்த உரையாடலில் எந்த நாடுகள் தமிழர்களுக்கு ஆதரவாகவும், எந்த நாடுகள் எதிராகவும் பேசியது?**

பேச்சாளர் கூறுகிறார்: இன்னும் அதிகாரபூர்வ சாராம்சம் வராததால், தாம் எடுத்த குறிப்புகளைப் பொறுத்தே பேச வேண்டியிருக்கிறது. இந்த முன்மொழிவை யுகே *(UK)* வைத்தது; அது மறைந்த டாக்டர் மனோகரனுக்கு அஞ்சலியாகவும், அவருடைய நீதி போராட்டத்தை நினைவுகூர்வதாகவும் இருந்தது. பல என்.ஜி.ஓ.க்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நீண்டகால பிரச்சனைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து கவலை தெரிவித்தன. இதன்அடிப்படையில்தான்இந்த தீர்மானம் வந்தது. இலங்கையை காப்பாற்ற சீனா இணைந்தது; அதில் புதுமையில்லை-வழக்கம்போல இலங்கையை ஆதரித்தது.


**இந்தியாவினுடைய நிலைப்பாடு எப்படி இருந்தது?**

நான் கண்டதையும் கேட்கிறதையுமே உங்களிடம் சொல்ல விரும்புகிறேன் — அதிகாரபூர்வ முடிவால் அல்ல. ஊடகம் ஊடாக உண்மையான தகவலை மக்கள் வரை கொண்டு சேர்ப்பதும், ஐ.நா.வில் நேரடியாக பணியாற்றும் செயல்பாட்டாளர்களை மக்களுடன் இணைக்கும் முயற்சியும் நமது கடமை. ஜீரோ டிராப்டை நாங்கள் வாசித்து, நமது எழுத்து மற்றும் வாய்மொழி அறிக்கைகளில் அதனைப் பதிவு செய்துள்ளோம்.

அந்த 14 பரகிராப்களில் உள்ள கோட்பாடுகளை நாங்கள் ஆராய்ந்து, பின்தொடர்ந்து வருகிறோம். முக்கியம்: இது “பொருளாதார தவறான மேலாண்மை” என்று மட்டும் சொல்லக்கூடாது -கட்டமைப்பு சார்ந்த இனவாத கொலைக்கே ஒத்துள்ள நிகழ்வுகள் நடந்ததாகவே நாங்கள் பார்க்கிறோம்.

பாதிக் கப்பட்ட மக்கள், காணாமல் போனவர்கள், அழியப்பட்ட நிலங்கள் — இவை எல்லாம்

**உயிரோடைத் தமிழ் வானொலிக்கு நிஸா பீரிஸ் அவர்கள் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**



தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# காற்றாலையும் மன்னார்த் தீவும்!



மன்னார்த் தீவு மக்களால் மட்டுமல்ல தமிழர் தாயகம் முதல் தென்னிலங்கை வரையுமாகவுள்ள மனிதர்களால் பேசப்படும் விவகாரமான இந்தியாவின் காற்றாலைத் திட்டம் தொடர்பில் பல கருத்துகளும், செய்திகளும் பரிமாறப்பட்டாலும் மன்னார் மக்களின் கோரிக்கையும் அவர்களுக்காகக் குரல் கொடுப்போரின் சிந்தனை அல்லது கோரிக்கையும் இலங்கைத் தீவின் அபிவிருத்திகளைத் தடுப்பது கிடையாது மாறாக இத் திட்டத்தில் இருக்கும் பல பாதகங்களையும் அத்தோடு மன்னார்த் தீவில் ஏலவே இத்திட்டத்தால் தாம் எதிர்நோக்கிய சவால்கள்,பிரச்சனைகள்,பாதிப்புகள் பற்றியும் தமது வாழ்வாதாரம் இயற்கையின் சமநிலை தமது இருப்பு என்பவை இத் திட்டத்தால் பாதிக்கப்படுகிறது போன்ற பல நியாயங்களைக் கூறியும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் நிலை கவலையளிக்கிறது.



மன்னார் மக்களை நேரடியாக மிக மோசமாக பாதித்துள்ளது இந்த காற்றாலைத் திட்டம் மாத்திரமல்ல கனிய மணல் அகழ்வும்தான் என்பது மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்த கதையாகிப் போகிறது.



இத் திட்டத்தினால் சுமார் 30 கிலோமிட்டர் நீளமும் 04 கிலோமீட்டர் அகலமும் கொண்ட இச் சிறிய அழகிய தீவில் வாழும் சுமார் 75000 பொதுமக்களும்,பாதிக்கப்படுகிறார்கள் இவர்களது பிரதான வாழ்வாதாரமான மீன்பிடி பாதிக்கப்படுகிறது, பறவைகள் பாதிக்கப்படுகிறது, ஆனாலும் இது எதையுமே கவனத்தில் கொள்ளாது இந்தத் திட்டத்தை அமுல்படுத்த நினைப்பது பாரிய தவறாகும்



புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் ( *Renewable Energy)* எனும் இந்த காற்றாலைத் திட்டத்தை நாம் வரவேற்கிறோம் ஆனால் அத்திட்டத்திற்குப் பொருத்தமான இடம் எமது மன்னார் தீவு கிடையாது என்பதையும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் தெளிவாகக் கூறியிருக்கிறோம்.

**தாமோதரம் பிரதீவன்,**
மனித உரிமை செயற்பாட்டாளர்,
ஆய்வாளர்,எழுத்தாளர்.

அத்தோடு இத் திட்டத்திற்காக ஏலவே இந்த மன்னார்த் தீவில் சுமார் 36 காற்றாலைகள் நிறுப்பட்டுள்ளன, அதனால் ஏற்படும் பாதிப்புகள் என்ன என்பதை அறிந்ததனால்தான் மீண்டும் இத் திட்டத்தில் இணைக்கப்படவுள்ள 14 காற்றாலை எனும் புதிய திட்டத்திற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிப்பதோடு எமது தரப்பு நியாயங்களையும் கூறுகிறோம் என அந்த மக்கள் தெரிவிக்கிறார்கள்.



மேலும் இத்திட்டத்திற்கு மிகவும் பொருத்தமான இடங்கள் பற்றிய ஆய்வு ஒன்றின் முடிவுகளைக் கூறிய மொரட்டுவ பல்கலைக்கழகம் இத்திட்டத்திற்கு இலங்கையில் அதிக காற்று கிடைக்கக் கூடிய கதிர்காமத்தையண்டிய சில பிரதேசங்களைப் பொருத்தமான இடங்களாகக் கூறியிருந்தும் இத்திட்டம் ஏன் மன்னார்த் தீவை நோக்கிக் கொண்டு வரப்பட வேண்டும் எனவும் இதன் பின்னணியிலுள்ள மிக மோசமான அரசியல் என்ன என்பதையெல்லாம் ஆராய வேண்டியுள்ளது.



ஏனென்றால் இத்திட்டத்திற்காக மன்னாரிலுள்ள வேறு இடங்களும் தெரிவு செய்யப்படாமல் மன்னாரில் மக்கள் வாழுகின்ற பகுதியை அதற்காகத் தெரிவு செய்துள்ள விடயமும் சிந்திக்க வைக்கிறது.

வெறும் 30 கிலோமீட்டர் நீளமும் 4 கிலோமீட்டர் அகலமுன் கொண்ட மன்னார் தீவில் ஒரு காற்றாலைக் கோபுரத்துக்கு சுவீகரிக்கப்படும் காணியின் அளவு 10 ஏக்கர் ஆகும். அதற்காக நிலத்தின் கீழ் சுமார் 75 அடிக்கு

தொடர்ச்சி 15ஆம் பக்கம்




# இனவாதத்தால் மலையக அதிகார சபையை மூட சூழ்ச்சி

**மருதன் ராம்**

பெருந்தோட்ட மக்களுக்காக உள்ள அரச அமைப்புகளில் முக்கிய இடம் வகிக்கும் மலையக அதிகார சபை என்ற பெருந்தோட்ட பிராந்திய புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பான சர்ச்சை தொடர்ந்து நீள்கிறது. இந்த அதிகார சபையை இல்லாமல் செய்யும் செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக எதிர்தரப்பினர் தொடர்ச்சியாக குற்றம் சாட்டுகின்றனர். எனினும் மறுபுறம் அவ்வாறான எவ்வித செயற்பாடுகளும் இடம் பெறவில்லை என்று அரசாங்கமும் சில அரச அதிகாரிகளும் கூறி வருகின்றனர்.



எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் தீர்வின்றி நீண்டு செல்கின்றன. பெருந்தோட்டங்களில் வாழும் மலையக மக்களை இந்நாட்டின் சம உரிமை அனுபவிக்கும் பிரஜைகளாக மாற்றும் நோக்கத்துடன் பழனி திகாம்பரம் அமைச்சராக இருந்தபோது 2018இன் இறுதிக் காலப்பகுதியில் மிகுந்த சவால்களுக்கு மத்தியில் இந்த அதிகார சபை உருவாக்கப்பட்டது. எனினும் நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மூடிவிடும் அரசாங்கத்தின் தீர்மானத்தில் மலையக அதிகாரசபையும் உள்வாங்கப்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் உயர்மட்ட நிர்வாக உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு குழு டிசம்பர் 2024இல் நியமிக்கப்பட்டது.



இக்குழுவினால் கடந்த பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு மலையக அரசியல் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். அந்த வரிசையில் மலையக அதிகாரசபை மூடப்படக்கூடாது என்றும் அது மலையக பெருந்தோட்ட மக்களின் உரிமைக்காக செயற்படும் ஒரு அமைப்பு என்றும் வலியுறுத்தி பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் முன்னதாக ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவுக்கு கடிதம் அனுப்பி இருந்தார்.




அந்தக் கடிதத்தில் மலையக அதிகார சபையின் தேவை, அதனூடாக பெருந்தோட்ட மக்களுக்கு ஆற்றப்படும் பணி மற்றும் அதன் உருவாக்கத்தில் காணப்பட்ட சிக்கல்கள் உள்ளிட்ட பல விடயங்களை தெளிவுபடுத்தி இந்த கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. இந்தப் பின்னணியில் குறித்த கடிதத்திற்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் பதில் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தை பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தமது சமூக ஊடக பக்கத்தில் வெளிப்படுத்தியுள்ளார். இதன்படி, “இந்த மலையக அதிகாரசபை பற்றிய (under review) மீளாய்வு நடைபெறுகிறது” என்று ஜனாதிபதியின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளை தாம் அறியப்படுத்துவதாகவும் ஜனாதிபதி மனோ கணேசனுக்கு பதில் அனுப்பியுள்ளார்.

இந்தநிலையில் குறித்த விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனுக்கும் அரசாங்கத்தின் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகருக்கும் இடையே பாராளுமன்றில் வாதபிரதிவாதங்கள் இடம் பெற்றிருந்தன. மலையக அபிவிருத்தி அதிகார சபை இல்லாதொழிக்கப்படாதென்றும் அது தொடர்பில் அரசாங்கம் எந்த தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை எனவும் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த அதிகார சபையை விரிவாக்கம் செய்து முன்னெடுத்துச் செல்வதே அரசாங்கத்தின் தீர்மானம். மலையக மக்களையும் அவர்களுக்கான நிறுவனங்களையும் அரசாங்கம் பாதுகாக்கும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார். பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையிலான குழுவில் மேற்படி அதிகார சபையை மேலும் விரிவு படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதே தவிர, அதனை இல்லாதொழிக்கும் தீர்மானம் எடுக்கப்படவில்லை.

அந்த வகையில் மலையக அபிவிருத்தி அதிகார சபை எந்த வகையிலும் இல்லாதொழிக்கப்பட மாட்டாது என்றும் அமைச்சர் தெரிவித்தார். இதன்போது குறுக்கீடு செய்து கருத்து தெரிவித்த மனோ கணேசன் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தாலும் ஜனாதிபதி தனக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறித்த அதிகாரசபை தொடர்பில் பிரச்சினை காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளதாகவும் அவ்வாறானால் சம்பந்தப்பட்ட அமைச்சர் உள்ளிட்ட அனைவரும் இது தொடர்பில் முறையாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.



மீண்டும் அதற்கு பதிலளித்த அமைச்சர் சந்திரசேகர் மலையக அதிகார சபையை இல்லாதொழிக்கப்போவதில்லை என்பது அரசாங்கத்தின் தீர்மானமாகும். அந்த வகையில் அதை விரிவாக்கம் செய்து முன்னெடுத்துச் செல்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

அதை விடுத்து மனோ கணேசன் கூறுவது போன்று, பொதுப் பிரச்சினைகள் காணப்பட்டால் அது தொடர்பில் நாம் உரிய கவனம் செலுத்தி பேச முடியும் என்றும் தெரிவித்தார்.

கடந்தகாலங்களில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய பல விடயங்கள் இருந்தும் அதனை மேற்கொள்ள முடியாமற் போயுள்ளது. எனினும், “நாம் மலையக மக்களுக்கு சேவைகளை

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# காசா போர் நிறுத்தம்
## எப்போது இறுதித் தீர்வு சாத்தியமாகும்?

வேல்ஸில் இருந்து **அருஸ்**

அக்டோபர் 7, 2023 அன்று பாலஸ்தீனிய ஆயுதக் குழுக்கள் காசா பகுதியில் இருந்து இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி சுமார் 1,200 பேரைக் கொன்று சுமார் 250 பணயக்கைதிகளைக் கைப்பற்றி இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன.




அதன் பின்னர் 2.1 மில்லியன் பாலஸ்தீனியர்கள் வாழ்ந்த 365 சதுர கிலோமீட்டர் நிலப் பரப்பின் மீது இஸ்ரேல் பெரிய அளவிலான வான் வழித் தாக்குதல்கள் மற்றும் தரைவழி நடவடிக்கை ஆரம்பித்தது, காசாவை மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஹமாஸின் நிலத்தடி சுரங்கப்பாதை வலையமைப்பை அழித்து 2024 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இராணுவம் வடக்குப் பகுதியின் மீது கட்டுப்பாட்டை நிறுவியது. பணயக்கைதிகள் பட்டியலை பரிமாறிக்கொள்வது மற்றும் போர் நிறுத்தம் தொடர்பான முக்கிய நிபந்தனைகளை இரு தரப்பினரும் பூர்த்தி செய்யத் தவறியதால், ஜனவரி-மார்ச் 2025 இல் 42 நாள் போர் நிறுத்த முயற்சி தோல்வியடைந்தது, மேலும் அமெரிக்கா, எகிப்து மற்றும் கத்தாரின் மத்தியஸ்தம் இருந்த போதிலும், அடுத்தடுத்த ஒவ்வொரு இடைநிறுத்தமும் மீண்டும் போர் தொடங்குவதில் முடிந்தது.



அதே நேரத்தில், ஹமாஸின் தலைமைக்கு எதிராக இஸ்ரேல் "இலக்கு வைக்கப்பட்ட தாக்குதல்கள்" என்ற உத்தியைப் பயன்படுத்தியது. ஜூலை 31, 2024 அன்று, இயக்கத்தின் அரசியல் பணியகத்தின் தலைவர் இஸ்மாயில் ஹனியே டெஹ்ரானில் கொல்லப்பட்டார். அக்டோபர் 2024 இல், அரசியல் துறையின் தலைவர் யஹ்யா சின்வார் நீக்கப்பட்டார், செப்டம்பர் 2025 இல் ஹமாஸின் இராணுவப் பிரிவின் இரண்டு மூத்த தளபதிகளும் கொல்லப்பட்டனர். இதற்கு இணையாக, ஈரானிய பிரதேசத்திலும் தாக்குதல்களை விரிவுபடுத்தி யது, யுரேனியம் செறிவூட்டல் மையங்கள் உட்பட 100 க்கும் மேற்பட்ட இலக்குகளை F-35 விமானங்களுடன் தாக்கியது. அணு விஞ்ஞானிகள், மூத்த அரசியல் மற்றும் இராணுவ தளபதிகள் கொல்லப்பட்டனர்.



அதேசமயம், காசாவில் இரண்டு வருட மோதலின் போது அமெரிக்கா இஸ்ரேலுக்கு 21.7 பில்லியன் டாலர் இராணுவ உதவியை வழங்கியுள்ளது என்று பிரவுன் பல்கலைக்கழகத்தின் வாட்சன் சர்வதேச மற்றும் பொது விவகாரப் பள்ளியில் போர் செலவுகள் திட்டத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது. ஏமன் மற்றும் மத்திய கிழக்கின் பிற இடங்களில் இராணுவ நடவடிக்கைகளுக்காக பென்டகன் செலவிட்ட ஒட்டுமொத்த முதலீடு $31.35 முதல் $33.77 பில்லியன் வரை இருக்கும் என்று அறிக்கை கூறியுள்ளது.

இராணுவ உதவி மூலம், இஸ்ரேல் "காசா மக்கள் மீது பேரழிவு தரும் மனிதாபிமான இழப்பை ஏற்படுத்தியது", பாலஸ்தீனப் பகுதியின் மக்கள்தொகையில் 11% க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர் அல்லது காயமடைந்தனர், மேலும் காசா மற்றும் பரந்த பிராந்தியத்தில் குறைந்தது 5.27 மில்லியன் பேர் இடம்பெயர்ந்தனர்.



இஸ்ரேலிய தாக்குதலில் ஒவ்வொரு 10 பேரில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது காயமடைந்துள்ளனர். உணவு தேடிய 2,000 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். ஐ.நா. அமைப்பு மற்றும் முக்கிய உரிமைகள் குழுக்களால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் இஸ்ரேல் இனப்படுகொலை செய்ததாக குற்றம் சாட்டியுள்ளனர்.

மொத்தத்தில், கடந்த 2 ஆண்டுகளில், இஸ்ரேல் 200,000 டன் வெடிபொருட்களை வீசியுள் ளது, காசாவின் 90% அழித்துள்ளது மற்றும் 68,000 பாலஸ்தீனியர்கள், 20,000 குழந்தைகள், 12,600 பெண்கள், 1,670 மருத்துவ ஊழியர்கள், 254 பத்திரிகையாளர்கள், 140 சிவில் பாதுகாப்பு, 346 ஐ.நா. உதவிப் பணியாளர்கள் ஆகியோரைக் கொன்றுள்ளது. காயமடைந்தவர்களில் 40,000 க்கும் மேற்பட்டோர் வாழ்க்கையை மாற்றும் காயங்களைக் கொண்டுள்ளனர் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

போர் அதன் மூன்றாவது ஆண்டில் நுழையும் நிலையில், காசா நகரத்தைக் கைப்பற்ற இஸ்ரேல் ஒரு தாக்குதலைத் தொடங்கஇருந்த வேளையில், ஒரு புதிய அமெரிக்க அமைதித் திட்டம் வந்துள்ளது.




2025 இலையுதிர்காலத்தில், ஐ.நா. பொதுச் சபையின் 80வது அமர்வில், பல இஸ்ரேலின் மேற்கத்திய கூட்டாளி நாடுகள் காசாவில் ஏற்பட்ட மனிதாபிமான பேரழிவு மற்றும் அமைதி செயல்முறையின் தேக்கநிலையை மேற்கோள் காட்டி, பாலஸ்தீன அரசை முறையாக அங்கீகரித்தன. இந்த அங்கீகாரிப்பு பாரம்பரிய நட்பு நாடுகளுடனான இஸ்ரேலின் ஒருங்கிணைப்பை சிக்கலாக்கியுள்ளது.

நியூயார்க்கில் நடந்த 80வது ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தின் போது டொனால்ட் டிரம்ப்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# தனது கொள்கையை ஏற்காத தளபதி-களைக் களையெடுக்கும் முயற்சியில் அதிபர் ட்ரம்ப்

தமிழில்: **ஜெயந்திரன்**

“சீருடை அணிந்தவர்களை வெளியேற்றுங்கள். பருமனான உடலைக் கொண்டிருக்கும் தளபதிகளைவேலையிலிருந்துதூக்குங்கள்தாடிகளைச் சவரம் செய்துவிடுங்கள். ஏனையோரால் இனங்காண முடியாதபடி கட்டப்பட்டிருக்கும் அவலட்சணமான கப்பல்கள் இனித் தேவையில்லை. பெருமைக்குரிய சண்டைக்கப்பல்களை மீளவும் கொண்டுவாருங்கள்.”

அடிப்படையில், குவான்டிக்கோ (Quantico) என அழைக்கப்படும் கடற்படைத் தளத்தில், செப்ரெம்பர் 30ம் திகதி, அதிபர் டொனால்ட் ட்ரம்பும் அவரது பாதுகாப்புச் செயலரான பீற் ஹெக்செத்தும் கிட்டத்தட்ட 900 அட்மிரல்களையும் தளபதிகளையும் ஒரு சந்திப்புக்கு அழைத்திருந்தார்கள். முதலில் இந்த நிகழ்வு ஒரு அரங்க நாடகம் போன்று தான் காட்சியளித்தது. அமெரிக்காவில் ஏற்படப்போகும் ஓர் இராணுவப் புரட்சியின் தொடக்கமாகக்கூட இந்தச் சந்திப்பு பார்க்கப்படலாம்.



என்ன விடயம் பேசப்படும் என்று குறிப்பிடப்படாமலேயே தளபதிகள் சந்திப்புக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். எல்லாத் தரத்திலிருக்கும் அதிகாரிகள் மத்தியிலும் ஓர் அங்கலாய்ப்பு தொற்றிக்கொண்டது. அங்கு நடந்தேறிய விடயம் ஒரு வகையில் ஒரு பெருங்காட்சியாகவும் அதே நேரம் களையெடுக்கும் நடவடிக்கையாகவும் இருந்தது. ஆயுதப் படைகள் பெண்கள் மயப்படுத்தப் படுவதை ட்ரம்ப் எள்ளி நகையாடினார். பாண்ட் வாத்தியக் குழுவின் கவின் கலையழகுக்காக அவர்களைக் கடிந்து கொண்டார். அதுமட்டுமன்றி நோபல் பரிசு வழங்கும் குழுவினர் தன்னை இன்னும் இனங்காணவில்லை என்ற ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினார். இராணுவப்பிரிவுடன் எந்த ஒரு தொடர்பும் அற்ற ஹெக்செத், உடலை எப்படி கட்டுக் கோப்பாக வைத்திருப்பது என்பது தொடர்பாகவும், ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பது தொடர்பாகவும் வகுப்பு எடுத்தார். அவரது உரை பென்ரகனின் பாதுகாப்பு அதிகாரியின் உரை போன்று இருப்பதற்குப் பதிலாக, ஓர் உயர்தரப் பாடசாலையின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளரின் உரையாகவே அமைந்தது.



ஆனால் இவ்வளவற்றுக்கும் பின்னே ஒரு விடயம் மட்டும் தெளிவாகத் தெரிந்தது. யாராவது தன்னை எதிர்த்தால் அவர்கள் பணியிலிருந்து தூக்கப்படுவார்கள் என்பதை ட்ரம்ப் தெட்டத்தெளிவாகக் கூறினார். “விருப்பமில்லாவிட்டால் தாராளமாக நீங்கள் விட்டு விட்டுப் போகலாம்.” ஆனால் உங்கள் பணி நிலையையும் உங்கள் எதிர்காலத்தையும் நீங்கள் இழந்து விடுவீர்கள்.

அதன் பின்னே தான் அனைவருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்த வார்த்தைகள் வந்தன. சிக்காகோ போன்ற அமெரிக்க நகரங்கள் இராணுவத்தின் பயிற்சிக்களமாக மாறக்கூடிய சாத்தியங்கள் உண்டு. குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கு எதிரான போராட்டம் உண்மையில் யுத்தமாகவே பார்க்கப்படும்



### ட்ரம்பின் இராணுவம்: மரபு அல்ல பிரமாணிக்கமே முக்கியம்

இதை வெறுமனே மக்களைக் கவரும் ஒரு முன்னெடுப்பாகக் கருதமுடியாது. இது ட்ரம்பின் உண்மையான நோக்கத்தை வெளிப்படுத்துகின்றது. தனக்குத் தனிப்பட்ட விதத்தில் பிரமாணிக்கம் உள்ள ஓர் படையாக அமெரிக்க இராணுவத்தை மாற்றி அமைப்பதே இதன் உண்மையான நோக்கம் ஆகும். தனது முதல் பதவிக்காலத்தில் இதனை நிறைவேற்ற ட்ரம்ப் ஆல் முடியவில்லை. அதுமட்டுமன்றி அவருக்குக் கீழ்ப்படிய மறுத்த தளபதிகள் குழுவினால் அவரது முயற்சிகள் அனைத்தும் தோற்கடிக்கப்பட்டன. ஆப்கானிஸ்தாலிருந்து நேட்டோ வரை அனைத்திலும் அவரது முயற்சிகளை அவர்கள் தோற்கடித்தார்கள். ஜெனரல் மார்க் விலி போன்ற சிலர் சீனாவை இரகசியமாகத் தொடர்பு கொண்டு, ட்ரம்பின் கட்டளைகளை தாங்கள் செயற்படுத்த மாட்டோம் என்று பேஜிங்குக்குத் தெரிவித்தார்கள்.



இப்போது, 2025 இல் இவ்வாறான ஒரு அவமானத்தை மீண்டும் ஒரு தடவை எதிர்கொள்ள ட்ரம்ப் தயாரில்லை. அனுபவமற்ற ஆனால் ட்ரம்புக்கு மிகவும் பிரமாணிக்கமாகச் செயற்படக்கூடிய ஹெக்செத்தை அதனால் தான் ட்ரம்ப் தெரிவுசெய்தார். இவ்வருடம் ஜனவரி மாதத்திலிருந்து புதிய ட்ரம்ப் நிர்வாகத்துடன் பகிரங்கமாக முரண்பட்ட காரணத்தினால், 15 மூத்த அதிகாரிகள் பதவிகளிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்கள். செய்தி மிகவும் தெளிவாகவே இருக்கிறது. “எம்மோடு முரண்பட்டால் வெளியேற்றப்படுவீர்கள்.”

இந்த அணுகுமுறைக்கு ட்ரம்ப் கற்பிக்கும் காரணத்தில் அரசியலும் இருக்கிறது. இராணுவ நலன்களும் இருக்கின்றன. ட்ரம்பின் அமெரிக்கா வெளிநாடுகளில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக உள்நாட்டிலே தான் கவனம் செலுத்துகிறது. இவ்வாறான ஒரு மாற்றத்தைப் பிரதிபலிக்கும் ஒரு இராணுவமே ட்ரம்புக்குத் தேவை.

தற்போது முடிவு செய்யப்படும் பாதுகாப்பு மூலோபாயத்தில் பல்வேறு நாடுகளில் உள்ள அமெரிக்க படைகளை மீள அமர்த்தும் செயற்பாட்டுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. இதிலே முக்கிய கட்டளைப்பீடங்கள் மூடப்படவிருக்கின்றன. ஐரோப்பா, மத்திய கிழக்கு ஆகிய பகுதிகளிலிருந்து துருப்புகள் மீள அழைக்கப்பட்டு, அமெரிக்காவின் உள்ளகப் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கப்படவிருக்கிறது. குற்றச்செயல்கள் தொடங்கி அரசியல்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

### 1983 கறுப்பு ... தொடர்ச்சி ...

நடாத்தியது.இதன் பின்னர் உப்புச் சப்பற்ற ஒரு அறிக்கையை அக்குழு வெளியிடப்பட்டது. கலவரம் நடந்ததற்கான பின்புலம் எதுவும் கூறப்படாத நிலையில் இது நடந்தது, இப்படி நடந்தது அதற்கான நட்ட ஈடுகளை வழங்கத்தான் வேண்டும் என்ற வகையில் ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டது.எனினும் அரசாங்கத்தின் ஆதரவால் இடம்பெற்ற விடயங்களை ஆணைக்குழு சொல்லத் தவறி விட்டது.

ஆணைக்குழுக்களும் அரசின் முகவர் குழுக்களாகவே செயற்பட்டன. என்பதற்கு இது நல்ல உதாரணமாகும்.

இப்போது 42 வருடங்கள் கடந்து கோமாவில் இருந்து எழும்பிய நிலையில் 83 கறுப்பு யூலை தொடர்பாக புத்தக வெளியீடும், நீதி கேட்கும் அழைப்பும் விடப்பட்டு தற்போது ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் தாய்க்கட்சியான ஜே வி பி கட்சியின் ரில்வின் சில்வாவும் நீதிகேட்க வெளிக்கிட்டுள்ளார்.

ஈழத்தமிழர்களுக்கும். இலங்கைத்தமிழர்களுக்கும்.இலங்கையின் வரலாற்றை எடுத்துக் கொண்டால் 1956, 1958, 1960, 1981, 1983, 1986 ,2009, என்று காலத்துக்குக் காலம் இனப்படுகொலைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.அண்மைகாலத்திலும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை தொடர்ந்தே செல்கிறது.

இலங்கையில் ஆட்சியில் இருந்தவர்கள், இருப்பவர்கள்எவருமேஇனப்படுகொலைகளுக்கு உள்நாட்டு பொறிமுறை மூலம் நீதி கிடையாது என்ற அறுதியான முடிவை கடந்த 70, வருடங்களாக மாறி மாறி ஆட்சி செய்த சிங்கள தலைவர்களிடம் இருந்து தமிழ் மக்கள் கற்றுக்கொண்ட பாடம் அதுவாகும்.

அதனால்தான் சர்வதேச நீதியை கடந்த 16, வருடங்களாக ஐநா மனித உரிமை ஆணைக்குழுவிலும், சர்வதேச நாடுகளிடமும் வலியுறுத்திவருகின்றனர்.

2024,செப்டம்பர்,21ல் ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் அநுரா தெரிவாகி 2024, நவம்பர்,14, பாராளுமன்ற தேர்தலில் 159, மிக அதிகப்படியான ஒரு கட்சி அரசாங்கத்தை நிறுவிய பின்னர் ஞானம் பிறந்தது போன்று இப்போதுதான் உள்ளாட்டு பொறிமுறை மூலம் இனப்படுகொலைக்கான நீதியும், தீர்வும் வழங்குவதாக கூறுகின்றனர்.

அதிலும் 42, ஆண்டுகளுக்கு முன்னர் 1983, யூலை படுகொலைக்கு சிங்கள குண்டர்களுடன் இணைந்து தமிழர்களை கொன்றுகுவித்தமைக்கு ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஜேவிபி கட்சிக்கும் பங்கிருந்தது.

கறுப்பு யூலை வன்செயல்களுக்காக ஜனாதிபதி ஜெயவர்தனவோ அல்லது அன்று பிரதமராக இருந்து பிறகு ஜனாதிபதியாகவும் வந்த ரணசிங்க பிரேமதாசவோ அல்லது ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தில் முக்கியமான பதவிகளில் இருந்த அரசியல்வாதிகளில் எவருமோ அல்லது ஜேவிபி கட்சியை சேர்ந்தவர்களோ தமிழ் மக்களிடம் வருத்தம் தெரிவித்ததில்லை.

ஆனால் 1994, ல் ஜனாதிபதியாக தெரிவான சந்திரிகா 2004, ம் ஆண்டு காலப்பகுதியில் என நினைக்கிறேன் 20, ஆண்டுகள் கடந்து 1983, கறுப்பு யூலை இனப்படுகொலைக்கு சாட்டுப்போக்காக ஒரு தடவை மன்னிப்புக் கோரினார். வேறு எந்த சிங்கள கட்சித்தலைவர்களும் மன்னிப்பு கோரவில்லை.

2015, ல் நல்லாட்சியில் முட்டுக்கொடுத்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பை திருப்திப்படுத்துவதற்காககூட ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் 2024, ஜனாதிபதி தேர்தலில் தமிழரசுக்கட்சி சுமந்திரன் அணி ஆதரித்த சஜீத்பிரமதாசாவும் மன்னிப்பு கோரவில்லை, தேசியமக்கள் சக்தி அரசின் ஆட்சி ஒருவருடம் எட்டும் நிலையில் தற்போது இவ்வாறான நாடகங்கள் அரங்கேற்றப் படுவதை காணலாம் சோழியன் குடும்பி சும்மா ஆடாது மாகாணசபை வேட்பாளர்கள், முதலமைச்சர்கள், என பலருக்கு இப்போது ஆசை பிறந்துள்ளது அதற்காக பல படங்களும் நாடகங்களும் காட்டியே ஆக வேண்டும் அதில் ஒன்றுதான் இவ்வாறான காட்சிகள்.

• • •

### இலங்கை எதிர் .. . தொடர்ச்சி ...

நாடுகள் மூலம் வாக்கெடுப்பை கோரவோ அவர் முனைந்திருக்கவில்லை.

ஐ.நா. தீர்மானத்தை நிராகரித்த அரசாங்கம், வாக்கெடுப்பைக் கோராமல் அதனை நிறைவேற அனுமதித்தது, அதன் வெளியுறவுக் கொள்கையில் உள்ள குழப்பத்தை தெளிவாகக்காண்பிப்பதாக தயான் ஜயத்திலக போன்ற விமர்சகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஆனால், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், வாக்கெடுப்பைக் கோரினாலும் தோல்வியடைவோம் என்று தெரிந்து கொண்டே, ஏன் மக்களின் வரிப்பணத்தை வீணாக்க வேண்டும் என்று பாராளுமன்றத்தில் அளித்த விளக்கம், அரசாங்கத்தின் சர்வதேச அரசியல் ரீதியான பின்னடைவை அம்பலமாக்கியுள்ளது.

அதுமட்டுமன்றி, ஜே.வி.பி.தலைமையிலான அரசாங்கம் தனது வழங்கமான சித்தாந்தத்தில் இருந்தவாறு, சர்வதேச தலையீடுகளை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டு, மறுபுறம் அதற்குத் தலை வணங்கியுள்ளமை அதன் இரட்டை முகத்தை வெளிப்படுத்துகின்றது.

இதானால் தற்போது தென்னிலங்கையில் புலம்பெயர் தமிழர்களின் ஆதரவுக்காகப் படையினரைக் காட்டிக் கொடுப்பதாக சிங்களத் தேசியவாத சக்திகள் பிரசாரம் செய்வதற்கான சூழலுக்கு வழிகோலியுள்ளது.

எவ்வாறாயினனும், ஐ.நா.வில் நிறைவேற்றப்பட்ட தற்போதைய தீர்மானம் தற் போதைக்கு கடுமையான சர்வதேச தலையீட்டைத் தவிர்க்க உதவியிருந்தாலும், இதுவொரு தற்காலிகத் தளர்வுதான் எனக் கொள்ள முடியும்.

குறிப்பாக, அரசாங்கம் உள்நாட்டுப் பொறி முறைகள் மூலம் தீர்வு காண்பதாக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்தில்உள்ளது. கடந்தகாலங்களில், அரசாங்கங்கள் வாக்குறுதிகளைக் காப்பாற்றத் தவறியபோதே, சர்வதேச அழுத்தங்கள் தீவிரமடைந்து, சர்வ தேச விசாரணைப் பொறிமுறைகளுக்கான கோரிக்கைகள் வலுப்பெற்றன என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவ சுட்டிக்காட்டுகிறார்.

அரசாங்கம் தற்போது உண்மையைக் கண்டறி வதற்கான உள்ளகப் பொறிமுறையை வலுப்படுத்துவது, செம்மணி மனிதப் புதைகுழி போன்ற விவகாரங்களில் சர்வதேச நியமங்களுக்கு அமைய விசாரணைகளை மேற்கொள்வது, காணாமல் போனோர் அலுவலகத்தின் சுயாதீனமான இயங்குகையை உறுதிப்படுத்துவது போன்ற நம்பிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் நடைமுறையில் அரசாங்கத்தின் ‘அரசியல் இயலுமை’ சாதகமான சமிக்ஞைகளை வெளிப்படுத்தவில்லை.

ஆகவே, இலங்கை அரசாங்கம் எதிர்க்கின்ற தீர்மானம் என்பதற்காக இதனை ஜெனிவாவில் தமிழர்கள் அடைந்த வெற்றி என்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு சாதகமானது என்றும் கொண்டாட முடியாது.

பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் எதிர்பார்ப்பது, நீதியையும் பொறுப்புக்கூறலையும் தான். அதுதான் நிலையான நல்லிணக்கத்தையும் நிரந்தரமான அமைதியையும் ஏற்படுத்திக் கொடுக்கும். ஆனால் அதனை நோக்கி தற்போதைய தீர்மானம் நகர்வதற்காக ஒரு அடியைக்கூட முன்நோக்கி வைத்திருக்கவில்லை என்பது பெருந்தோல்வியே.

LENIO
Architectural Planning | Structural Design | Party Wall Agreement
Sadadcharam Easwaran (Easan)
BEng MSc DIC CEng C.BuildE MICE MCABE MFPWS
Director
+44 (0) 20 4558 8272
+44 (0) 7831 199 962
easan@leniogroup.com
www.leniogroup.com
5a St. James's Road
Croydon, CR0 2SB
ice cabe FPWS

JR Print
www.jrprint.com
WhatsApp 07939 998730
61, Hoe Street, Walthamstow
London E17 4SA
Email:jrprintuk@gmail.com
Fast, Relaible & Friendly Service
Guaranteed Delivery Within 72 Hours In Europe at Minimal Cost
Call For Free Guatation

## சம்பூரில் சூரிய ... தொடர்ச்சி ...

விவசாயக் காணியில் 400க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்ட நிலையில் 545 ஏக்கரில் இத் திட்டத்தை நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து பாதிக்கப்பட்ட அப் பகுதி விவசாயியான நமச்சிவாயம்சிவபாதம்தெரிவிக்கையில் "இரண்டு ஏக்கர் தனியார் உறுதி காணியில் விவசாயம் செய்து வாழ்வாதாரத்தை மேம்படுத்த எண்ணிய போதும் அது நிறைவேறவில்லை.விவசாயம் செய்வதற்காக அங்கு சென்ற போது மின்சார சபையினரின் காணி என கூறி பொலிஸார் என்னை கைது செய்தனர் .மூன்று வருடங்களாக விவசாய செய்கையில் ஈடுபட்டிருந்த போது இவ்வாறான சம்பவம் இடம் பெற்றது என தெரிவித்தார். பாடசாலை செல்லும் இரு பெண் பிள்ளைகள் இவருக்கு இருந்த போதிலும் காணியை கையகப்படுத்திய நிலையில் தற்போது வேறு கூலித் தொழில் செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

குறித்த விவசாயியான ஒரே ஒரு கோரிக்கையாக மீள தனது காணியை தருமாறு கோருகின்றார்.

மேலும் மற்றுமொரு விவசாயியான சித்ரவேல் கிருபானந்தராஜா கூறுகையில், "2017ல் சொந்த உறுதிக் காணிக்குள் விவசாயம் செய்து வந்த நிலையில் மின்சாரசபைக்கு சொந்தமான காணி என வெளியேற்றினர்.விவசாயத்தை ஜீவனோபாயமாக கொண்டு வாழ்ந்து வந்தோம் ஆனால் இவ்வாறாக நில அபகரிப்பு செய்யப்பட்டால் வேறு எந்த தொழிலை செய்வது எமக்கு வேறு தொழில் தெரியாது என்றார்.

குறித்த விவசாயி சிறிய கடை ஒன்றை தற்போது நடாத்தி வந்தாலும் போதுமான வருமானமின்றி உள்ளார். இவர் போன்ற அப்பாவி ஏழை விவசாயிகளின் காணிகளை அபகரிப்பதை தற்போதைய ஆளும் அநுர குமார அரசாங்கம் நிறுத்த வேண்டும். அபிவிருத்தி என்ற போர்வையில் மக்கள் காணிகளை சூறையாடுவதை விடுத்து ஏனைய காணிகளை பெறலாம் என அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் இது குறித்து சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் (PCCJ) உத்தி யோகத்தர் தெரிவிக்கையில் " இங்கு மேற்கொள்ளப்படும் சூரிய மின் சக்தி திட்டம் என்பது நல்ல விடயம் ஆனால் மக்களின் வாழ்வாதாரமாக காணப்படும் விவசாய நிலத்தை கையகப்படுத்தி அவர்களின் ஜீவனோபாயத்தை அழித்து செய்வது ஆரோக்கியமானதல்ல, இவ்வாறான மக்களின் பரம்பரை பரம்பரை தொழிலாக விவசாயம்,கால் நடை காணப்படுகிறது இதன் மூலம் 505 ஏக்கர் மக்கள் காணிகளை பெற்று அபிவிருத்தி செய்வதை ஏற்க முடியாத நிலையில் உள்ளது. ஐந்து சிறிய குளங்களும் இதில் அடங்குகின்றன.

எவ்வளவோ காணிகள் இருக்கும் போது சம்பூர் மக்கள் விவசாய காணியை அபகரிப் பது நல்ல விடயம் அல்ல இதனால் அம் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய விளை நிலங்களை இதன் மூலம் மழுங்கடிக்கச் செய்கிறது. அரசாங்கத்துக்கு நாம் கூறும் பரிந்துரையாக இவ்வாறாக விவசாயிகளின் காணிகளை விடுத்து தரிசு நிலங்களில் இதனை மேற்கொள்ள முடியும் .உதாரணமாக புல்மோட்டை திரியாய் கடற்கரையை அண்டிய களப்பு பகுதியில் சூரிய மின் சக்தி நடைமுறைப்படுத்தலாம் அது போன்று குறைந்த முதலீட்டில் அரச திணைக்களங்கள், பாடசாலைகளில் உள்ள கூரைகளில் சூரிய சக்தி திட்டங்களை மேற்கொள்வதனாலும் மின் உற்பத்திகளை இலகுவாக நாட்டின் தேவை கருதி பெற்றுக் கொள்ளலாம்" எனவும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்களின் பூர்வீக விவசாய நிலங்கள் அதிகமாக அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டம் என்ற போர்வையில் இந்திய கம்பனிகளுக்காக வழங்கப் பட்டதை அடுத்து பல வீதிப் போராட்டங்களையும் ஆரம்பித்துள்ளனர். திருகோணமலை முத்து நகர் விவசாயிகளும் தங்களது விவசாய விளை நிலங்கள் சூரிய மின் சக்தி உற்பத்திக்காக தாரை வார்க்கப்பட்டதையடுத்து அப் பகுதி விவசாயிகளும் சத்தியாக் கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் திருகோணமலை மாவட்டத்தில் பிரதிய மைச்சராக உள்ளவர் கடந்த கால அரசாங்கத்துக்கு அப்போது அதிகாரத்தில் இல்லாத நிலையில் இந்திய கம்பனிகளுக்கு திருகோணமலை வளங்களை அநியாயமாக அரா விலைக்கு தாரை வார்க்கின்றனர் இதனை நிறுத்த வேண்டும் என பல தெளிவூட்டல்களை வழங்கியிருந்தார்.

ஆனால் ஆளும் தரப்பில் இப்போது உள்ள நிலையில் மௌனித்து விட்டார் போல தெரிகிறது.

எனவே தான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்கள் விவசாய நிலங்களை மீளப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட சமூகத்தின் ஒரேயொரு கோரிக்கையாக உள்ளது.

• • •

## வெடுக்குநாறி ... தொடர்ச்சி ...

அந்தவகையில் தமது மதம் சார்ந்த பணிகளை முன்னின்று மேற்கொள்பவர்களை அச்சுறுத்தி அவர்களது செயற்பாடுகளை நசுக்கும் செயற்பாடாகவே இதனைப் பார்க்க வேண்டியுள்ளது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

குறிப்பாகஎமது ஆலயத்தின்விக்கிரகங்கள் உடைக்கப்பட்ட விடயம் தொடர்பாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படாத நிலையில் எங்களை மாத்திரம் தொடர்ச்சியாக விசாரணை செய்கின்றனர் என அவர்கள் தெரிவித்தனர்.

## இஸ்ரேல் - பாலஸ் ... தொடர்ச்சி ...

உள்ள சில முக்கிய விஷயங்களை ட்ரம்பின் அறிவிப்பு குறிப்பிடவில்லை.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வியாழக்கிழமை தனது அரசாங்கத்தை கூட்டி இந்த ஒப்பந்தத்திற்கு அனுமதி பெற்றிருந்தார். இஸ்ரேலிய அரசாங்கம் அதை அங்கீகரித்த பிறகு காசாவில் ஒரு போர்நிறுத்தம் நடைமுறைக்கு வந்துள்ளது.

இந்த திட்டத்தினால் காசா மற்றும் இஸ்ரேலில் உள்ள மக்கள் தமது மகிழ்ச்சியை தெரிவித்து வருகின்றனர், இருப்பினும் இந்த ஆரம்ப ஒப்பந்தம் ஒரு நிரந்தர அமைதி ஒப்பந்தத்திற்கு வழிவகுக்கும் என்பது குறித்த நிச்சயமின்மை தோன்றியுள்ளது.

கடந்த 2 ஆண்டுகளில், இஸ்ரேல் 200,000 டன் வெடிபொருட்களை வீசியுள்ளது, காசாவின் 90% ஐ அழித்துள்ளது மற்றும் 68,000 பாலஸ்தீனியர்கள், 20,000 குழந்தைகள், 12,600 பெண்கள், 1,670 மருத்துவ ஊழியர்கள், 254 பத்திரிகையாளர்கள், 140 சிவில் பாதுகாப்பு, 346 ஐ.நா. உதவிப் பணியாளர்கள் ஆகியோரைக் கொன்றுள்ளது. காயமடைந்தவர்களில் 40,000 க்கும் மேற்பட்டோர் வாழ்க்கையை மாற்றும் காயங்களைக் கொண்டுள்ளனர் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

## சீனா நாணயத்தை ... தொடர்ச்சி ...

இந்தியாவில் இருந்து பணம் செலுத்துவது வழக்கமாக அமெரிக்க டாலர்கள் அல்லது ஐக்கிய அரபு எமிரேட்ஸ் திர்ஹாம்களில் வர்த்தகர்களுக்கு வழங்கப்படுகிறது, பின்னர் அவர்கள் அவற்றை எண்ணெய் உற்பத்தியாளர்களுக்கு செலுத்த ரஷ்ய ரூபிள்களாக மாற்றுகிறார்கள். யுவான் கொடுப்பனவுகள் கூடுதல் விலையுயர்ந்த படியை அகற்ற உதவுகின்றன என்று ஒரு வர்த்தகர் ராய்ட்டர்ஸிடம் கூறினார்.

ரஷ்யாவில் யுவான் ஒரு முக்கிய வெளிநாட்டு நாணயமாக மாறியுள்ளது, இது அதன் மிகப்பெரிய வெளிநாட்டு வர்த்தக மையங்களில் ஒன்றாகும். EU இன் விலை வரம்பைப் பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக வர்த்தகர்கள் ரஷ்ய எண்ணெயை டாலர்களில் விலை நிர்ணயம் செய்கிறார்கள், ஆனால் அதற்கு சமமான யுவான் கட்டணத்தை நாடுகின்றனர்.

2022 முதல், இந்தியா ரஷ்யாவிலிருந்து எண்ணெய் இறக்குமதியை கணிசமாக அதிகரித்துள்ளது, அதே நேரத்தில் ஐரோப்பாவிற்கு சுத்திகரிக்கப்பட்ட எரிபொருட்களின் முக்கிய விநியோகஸ்தராகவும் மாறியுள்ளது. தனியார் இந்திய நிறுவனங்கள் தள்ளுபடி விலையில் ரஷ்ய எண்ணெயை வாங்கி வருகின்றன.

ரஷ்யாவிலிருந்து இந்தியா எண்ணெய் கொள்முதல் செய்வது அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் கோபத்திற்கு ஆளாகியுள்ளது, அவர் ஆகஸ்ட் மாதத்தில் தெற்காசிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பெரும்பாலானவற்றிற்கு 25% தண்டனை வரிகளை விதித்தார்.

இந்தியன் ஆயில் கார்ப் நிறுவனத்தால் ரஷ்ய எண்ணெய்க்கு யுவானில் பணம் செலுத்துவது புது தில்லிக்கும் பெய்ஜிங்கிற்கும் இடையிலான உறவுகள் வளர்ந்துவருவதன் மற்றொரு அறிகுறியாகும்.

## புதிய பெண் ... தொடர்ச்சி ...

திங்களன்று(6) வெளியிடப் பட்ட ஒரு அறிக்கையில், ஒரே பாலின திருமணம் குறித்த விவாதங்கள் நடந்து கொண்டிருக் கும் நிலையில், முல்லல்லி "ஏற் கனவே கிழிந்த ஆங்கிலிகன் ஒற்று மையின் துணியை சரிசெய்ய நம்புகிறார்" என்று நுடுகுபா கேள்வி எழுப்பினார்.

ஒரே பாலின ஒப்புதல் வாக்குமூல ஆங்கிலிகன்களின் உலகளாவிய பெல்லோஷிப்பின் (GAFCON) ஒரு பகுதியாக நைஜீரியா, "வேத வசனங்களின் அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கான [அதன்] முந்தைய நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது" என்றும், அவர் "ஒற்றுமையின் சில பகுதிகளுக்குள் திருத்தல்வாத நிகழ்ச்சி நிரல்" என்று அழைத்ததை நிராகரிப்பதாகவும் அவர் கூறினார்.

"இந்தத் நியமனம், உலகளாவிய ஆங்கிலிகன் உலகம் இங்கிலாந்து திருச்சபையின் தலைமையையும் கேன்டர்பரி பேராயரின் தலைமையையும் இனி ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை மேலும் உறுதிப்படுத்துகிறது" என்று நுடுகுபா கூறினார்.

முல்லலியின் நியமனம் குறித்து GAFCON தானே "வருத்தத்தை" வெளிப்படுத்தியது, இங்கிலாந்து திருச்சபை "உலகளாவிய ஆங்கிலிகன்களை கைவிட்டு" அதன் தார்மீக தலைமையை இழந்துவிட்டதாகக் கூறியது. நைஜீரிய அறிக்கை குறித்து இங்கிலாந்து திருச்சபை இன்னும் எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை.

63 வயதான முல்லலி, அவரது நியமனத்தை மன்னர் சார்லஸ் III அங்கீகரித்த பிறகு கேன்டர்பரியின் 106வது பேராயராக நியமிக்கப்பட்டார். இங்கிலாந்து திருச்சபைத் தலைவர்களின் இறுதி உறுதிப்படுத்தலைத் தொடர்ந்து ஜனவரியில் அவர் பதவியேற்க உள்ளார், மேலும் இந்தப் பதவியில் இருக்கும் முதல் பெண்மணியாக இருப்பார்.

துணை-சஹாரா ஆபிரிக்காவின் பெரும்பகுதி முழுவதும், ஆங்கிலிகன் மற்றும் பிற கிறிஸ்தவ திருச்சபைகள் திருமணம் மற்றும் பாலினம் குறித்த பாரம்பரியக் கருத்துக்களைப் பேணுகின்றன. மிகப்பெரிய ஆங்கிலிகன் மாகாணங்களில் ஒன்றான நைஜீரியா திருச்சபை, திருமணத்தை ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான ஒன்றியம் என்று கண்டிப்பாக வரையறுக்கிறது மற்றும் பெண்களை பாதிரியார்களாகவோ அல்லது பிஷப்புகளாகவோ நியமிப்பதில்லை.

## காசா போர் . . . தொடர்ச்சி . . .

மற்றும் முஸ்லிம் மற்றும் அரபு நாடுகளின் தலைவர்களுக்கு இடையேயான தொடர் சந்திப்புகளுக்குப் பிறகு, டிரம்ப் காசா பகுதிக்கான ஒரு புதிய திட்டத்தை முன்வைத்தார், இது முன்னைய முயற்சிகளின் தோல்விகளுக்குக் காரணம் காட்டவும் பிராந்திய பங்காளிகளின் ஆதரவைப் பெறவும் நோக்கமாகக் கொண்டது.

ஒப்பந்தத்தின் ஒரு முக்கிய விதியாக, ஆவணத்தில் கையெழுத்திட்டவுடன் முழுமையான போர்நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஹமாஸ் அனைத்து உயிருள்ள இஸ்ரேலிய பணயக்கைதிகளையும் (சுமார் 20 பேர்) விடுவித்து, இறந்தவர்களின் திங்கட்சிழமை(13) ஒப்படைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பிறகு இஸ்ரேல் ஆயுள் தண்டனை அனுபவிக்கும் சுமார் 250 பாலஸ்தீனியர்களையும், போரின் போது தடுத்து வைக்கப்பட்டுள்ள 1,700 காசா குடியிருப்பாளர்களையும் விடுவிக்கும்.

2007 முதல் காசாவில் உள்ள ஹமாஸின் ஆட்சியை முற்றிலுமாக அகற்றி, அதற்கு பதிலாக அரசியல் சாராத பாலஸ்தீன குழு" ஒன்றை உருவாக்க இந்த திட்டமிடப்பட்டுள்ளது. இடைக்கால காலத்திற்கு, ஒரு சர்வதேச மேற்பார்வை அமைப்பு டிரம்ப் தலைமையிலான மற்றும் டோனி பிளேரின் ஆதரவுடன், அந்த பகுதியின் இராணுவமயமாக்கலை மேற்பார்வையிட நிறுவப்படும்.

இஸ்ரேல் பின்னர் தற்காலிக போர் நிறுத்தத்தின் போது குறிப்பிடப்பட்ட நிலைகளுக்கு தனது படைகளை திரும்பப் பெறும், அந்த நடவடிக்கை வெள்ளிக்கிழமை(10) ஆரம்பமாகியுள்ளது. மேலும் அரபு-முஸ்லிம் படை உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து, ராணுவம் முழுமையாக விலகும். இந்தப் படைகளில் சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், எகிப்து, ஜோர்டான், கத்தார், துருக்கி மற்றும் இந்தோனேசியாவைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் அடங்குவர். அவர்களின் முதன்மையான பணி ஒரு புதிய பாலஸ்தீன போலீஸ் படையைப் பயிற்றுவிப்பதாகும், இது படிப்படியாக சட்டம் மற்றும் ஒழுங்கு மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பிற்கான பொறுப்பை ஏற்கும்.

அக்டோபர் 4 ஆம் தேதி, ஹமாஸ் திட்டத்தின் முக்கிய விதிகளை செயல்படுத்தத் தயாராக இருப்பதாக அறிவித்தது. கடந்த வாரம் சோச்சியில் நடந்த வால்டாய் கிளப் முழுமையான அமர்வில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், காசா பகுதியில் மோதலைத் தீர்க்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் திட்டத்தை ஆதரிக்க ரஷ்யா தயாராக இருப்பதாகக் கூறினார். மோதலைத் தீர்க்க, பாலஸ்தீனம் இந்த தீர்வை எவ்வாறு பார்க்கிறது என்பதைப் புரிந்துகொள்வது அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

மறுபுறம், திட்டத்தின் தீவிர பலவீனம் என்னவென்றால், இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இரண்டின் அரசியல் விருப்பத்தையும் செயல்பாட்டுத் தயார்நிலையையும் அது நம்பியிருப்பதுதான். நெதன்யாகு "குறைந்தபட்ச தற்காப்பு நடவடிக்கைகளை" மட்டுமே உறுதியளிக்கிறார், மேலும் ஹமாஸ் ஆயுதக் குறைப்புக்கான தெளிவான உறுதிப்பாட்டைத் தவிர்க்கிறது. மேலும், டிரம்ப் தலைமையில் பிளேயர் ஆதரிக்கும் 'அமைதி கவுன்சிலின்' ஈடுபாடு மேற்பார்வை அமைப்பின் சுதந்திரத்தை கேள்விக்குள்ளாக்குகிறது.

காசாவுக்கான டிரம்பின் திட்டத்தை செயல்படுத்துவது தவிர்க்க முடியாமல் இஸ்ரேலின் உள்நாட்டு அரசியலுடன் பிணைக் கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகால போருக்குப் பிறகு, பொருளாதார இழப்புகள் மற்றும் ஐரோப்பாவில் இஸ்ரேலின் பிம்பம் மோசமடைவதால் பொதுமக்களின் விரக்தி மற்றும் சோர்வு அதிகரித்துள்ளது. இது நெதன்யாகுவுக்கு ஒரு பாதிப்பு மற்றும் அமைதி நோக்கிய எந்தவொரு நகர்வையும் கூட்டணி கொந்தளிப்பின் காரணியாக மாற்றுகிறது.

அதே நேரத்தில், தீவிர வலதுசாரி கூட்டணிக் கட்சிகளான இடாமர் பென் க்விர் மற்றும் பெசலெல் ஸ்மோட்ரிச் ஆகியோர் பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்ட பிறகு, ஹமாஸ் ஒரு அமைப்பாக அப்படியே இருந்தால், அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதாக வெளிப்படையாக அச்சுறுத்தி வருகின்றனர். இந்த நடவடிக்கை என்பது நெதன்யாகுவைப் பொறுத்தவரை தனது பாராளு மன்ற பெரும்பான்மையை இழக்கும் அபாயம்.

காசாவிற்கான புதிய டிரம்ப் திட்டம், கடந்த கால தவறுகளிலிருந்து படிப்பினைகளை உள்வாங்கிக் கொண்டாலும், பலவீனங்களும் உண்டு. அதாவது இரு தரப்புக்கும் வெற்றியற்ற தன்மை. நெருக்கடியில் செழித்து வளர்பவர்களுக்கு அமைதி உதவாவிட்டாலும், இஸ்ரேலியர்களுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் ஒரே மாதிரியான உயிர் நாடியாக அமைதி இருக்கிறது, ஏனென்றால் அமைதி மட்டுமே பாதுகாப்பை மீட்டெடுக்கிறது, பொருளாதாரத்தை சுவாசிக்க வைக்கிறது, எல்லையின் இருபுறமும் உள்ள குழந்தைகளுக்கு எதிர்காலத்தை அளிக்கிறது. குறுகிய கால அரசியல் ஆதாயத்தை விட மனித வாழ்க்கையை மதிக்கும் பொறுப்பான தலைமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட "இரு மக்களுக்கு இரண்டு நாடுகள்" என்ற தர்க்கத்திற்குள் மட்டுமே ஒரு இறுதி தீர்வு சாத்தியமாகும்.

• • •

## ஐநா மனித . . . தொடர்ச்சி . . .

புறக்கணிக்கப்படக்கூடாது. சரிவான வார்த்தைகள் அல்லது நினைவுச் சின்னங்கள் போதும்; நாங்கள் ஆசைப்படுவது ஒழுங்கான, கட்டமைப்பான நடவடிக்கைகள்-பாதிக்கப்பட்டோர் உள்ளிட்டவர்கள் தேர்வு செய்யப்பட்டு உண்மை கண்டறியும் மூலம் நீதி பெற வேண்டும். சர்வதேச அமைப்புகள் சில நாடுகளின் ரீதியான அரசியலைப் பின்பற்றாமல், செயல்திறனில் சமமான, பாதித்தோரை மையமாகக் கொண்டு செயல்பட வேண்டும். இது புதிய அரசு இல்லாமல் பழைய வரலாற்று நெருக்கடியின் தொடர்ச்சியான போல இருக்கிறதா என்று நாம் கவலைகளில் இருக்கிறோம். சர்வதேசம் பொறுப்பு ஏற்று, வாக்குமூலம் மற்றும் வாக்கிங் இரண்டும் அளித்து, மாற்றத்தை உறுதி செய்யும் நேரம் வந்திருக்கிறது.

**ஐ.நாவில் செயற்படும் தமிழ் அமைப்புகள் சமர்ப்பிக்கும் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை, நீங்கள் ஒரு செயற்பாட்டாளராகப் பார்க்கும் உரிமை உங்களுக்குண்டா?**

இது இருந்தால் நாங்கள் உறுதி செய்து பார்ப்போம். பின்புல அலுவல்கள் முழுமையாக வெளிப்படுத்தப்பட வேண்டும்; வழிகாட்டலும் அனைவரும் ஏற்க வேண்டும். இதை கடைப்பதே முக்கியம் நாம் சொல்கிறோம்.

**ஈழத்தமிழர் கேட்கும் விஷயங்களைப் பற்றிய ஆவணங்கள் அல்லது அறிக்கைகள் மற்ற அமைப்புகள் சமர்ப்பிக்கும்போது, அவை உண்மையில் பரிசீலிக்கப்படுகிறதா?**

நாங்கள் சேர்ந்த அனைத்து அமைப்புகளின் கையெழுத்துடன் சமர்ப்பிக்கப்பட்டக் கோரிக்கையில் நான் கைசாட்சி செய்தவர். 70 அறிக்கைகளை ஏற்கனவே எடுத்து சென்றோம்; 15-ஆம் தேதியில் இடம்பெற்ற கூட்டு நாடு கலந்துரையாடலில் அதை விளக்கியும், விவாதிக்கவும் செய்தோம். மக்கள் கையெழுத்துகளை (ஒரு லட்சத்துக்கு மேற் பட்டவை)ச் சேகரித்து வழங்கினோம்; ஆனால் அவை "பிரேமில்" (அதிகாரப்பூர்வ சட்டக் கட்டமைப்பில்) பதிவு செய்யப்படாமல் வெளியில் இருந்தால் பெரும் பிரச்சினை. ஆகவே, எழுத்து மூல அறிக்கைகள் ஐ.நா. பதிவு இடத்தில், ஐ.நா. சின்னத்தோடு அதிகாரப்பூர்வமாக தாக்கல் செய்வதே அவசியம். இது ஒரு புகைப்பட விளம்பரமல்ல; உண்மையான முறைமைகளில் கொண்டு சென்று, பதிவிறக்கப்பட்டு வரலாற்றில் நிலை பெற வேண்டும்.

நமது நோக்கம்: பாதித்தோர் குரலை மையமாக்கி, சாட்சியங்கள், ஆய்வுகள், டி.என்.ஏ. போன்ற ஆதாரங்களைக் கையேட்டில் சேர்த்து, ஓர் கட்டமைப்பான, சட்டபூர்வமான செயல் முறையால் நீதி கேட்க வேண்டும். ஓ.எச்.சிஆர்/ SLAP போன்ற மெக்கானிசத்தை உறுதிசெய்து, அவர் அணுகும் வழிகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும்; மட்டுமல்ல, இது superficial நிகழ்ச்சி அல்ல, தொடர்ச்சியான, நம்பகமான விசாரணைத் தளம் ஆக இருக்க வேண்டும். அரசியல் ரீதியாக 47 நாடுகளும் ஈழத் தமிழரின் நிலையை போதுமாய் தாங்கவ என்று நாம் உணர்கிறோம்; ஆகவே சரியான செயல்முறை மூலம் மக்களின் இழப்புகள், காணாமல் போனோர், நிலங்கள் ஆகியவற்றின் நியாயமான பதிவும், நீதியும் அவசியம்.

**இந்த தீர்மானம் 'ஐட்டம் 2' கீழ் வருகிறது - அதனால், நாம் தொடர்ந்து வலியுறுத்த வேண்டிய முக்கிய விடயம் என்ன?**

"ஐட்டம் 4க்கீழ்" ஒரு நாடு-குறிப்பிட்ட அறிக்கையாளர் நியமிக்கப்பட வேண்டும்; அதன் மூலம் ட்ரைப்யூனல் போன்ற சர்வதேச விசாரணை முறைமை உருவாகலாம். SLAP தாமதத்தை விட, எங்களுக்கு ஒரு சுதந்திரமான இன்வெஸ்டிகேசன் தேவையாகும் — மியான்மர் மாதிரி ஒரு இயந்திரம் வேண்டும். நாடுகளுடன் இணைந்து வேலை செய்ய, தேசிய அரசியல் குரலைவிட பாதிக்கும் பாதிக்கப்பட்டோர் குரலை முன்னிலைப்படுத்த வேண்டும். நாங்கள் பல வாய்மொழி அறிக்கைகளும் எழுத்து அறிக்கைகளும் சமர்ப்பித்து, "தமிழர்கள்" என்ற சொற்கள் பல இடங்களில் உயர்ந்தனர்; இது நமக்கு ஊக்கமளித்த செஷன்.

• • •

## எல்லைநிர்ணயம் . . . தொடர்ச்சி . . .

சென்ற அரச தரப்பு எதிர்த்தரப்பு முக்கியமாக தமிழ்தேசிய கட்சிகளை சேர்ந்தவர்கள் முன்னிலையில் புதிய அரசியல் யாப்பு ஏக்கி இராச்சிய சொல் மீண்டும் முளைத்துள்ளன.

புதிய அரசியல் யாப்பில் ஏக்கியராச்சிய என்ற சொல்தொடர் ஒற்றையாட்சிக்கான வரைவாகவே பார்க்கப்படுவதால் அதனை சகல தமிழ் கட்சிகளும் ஒற்றுமையாக ஏற்பதற்கு தயார் இல்லை.

சிங்கள எதிர்கட்சிகளும் ஏற்கனவே ஏக்கிய இராச்சிய என்ற சொல்லுக்கு கடும் எதிர்ப்புகளை நல்லாட்சி காலத்தில் வெளியிட்டன.

தற்போது தேசிய மக்கள் சக்தி "ஏக்கிய இராச்சிய" என்ற சொல்லை வைத்து புதிய அரசியல் யாப்பை காலத்தை இழுத்தடித்து செல்வதற்கு தயாராகிவிட்டார்கள்.

எனவே தேசிய மக்கள் சக்தி அரசா னது "எல்லைநிர்ணயம்" என்ற சொல் மாகாணசபை தேர்தலை பிற்போட்டு செல்லவும், "ஏக்கிய ராச்சிய" என்ற சொல் புதிய அரசியல மைப்பை காலத்தை கடத்த வும் கருவியாக கையில் எடுத்துள்ளனர் என்பது மட்டும் உண்மை

## காற்றாலையும் ... தொடர்ச்சி ...

மேல் தோண்டப்பட்டு கொங்கிறீட் தளம் இடப்படுகிறது இதனால் மழை காலங்களில் நீரோட்டம் தடைப்பட்டு வெள்ள அனர்த்தம் ஏற்படும் அபாயமுள்ளது.

கடந்த ஆண்டு பெய்த அதிக மழையின் வெள்ள நீர் வடியாமல் தொடர் இடப்பெயர்வுகளும் ஏற்பட்டு மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதனால் தற்போது கரையோர மீன்பிடி முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு அவர்களின் வாழ்வாதாரமும் கேள்விக்குறியாகியுள்ளது.

அதுமாத்திரமல்லாமல் மக்கள் குடியிருப்புகளுக்கு மிக அருகிலும் அவர்களது குடியிருப்புகளுக்கு மத்தியிலும்அமைந்திருக்கும் காற்றாலைக் கோபுரத்தின் சத்தத்தால் குழந்தைகளை வைத்திருப்போர் பலர் இடம்பெயர்ந்துள்ளதையும் அறிய முடிகிறது.

இவ்வாறான பல விடயங்களினால்தான் அந்த மக்கள் தமக்கான நீதியைக் கேட்டு வீதியிலிறங்கிப் போராடுகிறார்கள், முழு மக்களின் ஆதரவுடன் மக்கள் போராட்டமே அங்கு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்டு வரும் மக்கள் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கப் பல மனித உரிமை செயற்பாட்டாளர்கள்,சுற்றுச் சூழலியலாளர்கள், மதகுருமார்கள், அமைப்புகள் என பலர் திரண்டு ஆதரவு வழங்கி வருகின்றார்கள். இந்நிலையில் கடந்த 19.09.2025 அன்று கொழும்பில் ஜனாதிபதி செயலகம் முன்பாக ஒரு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது இதில் கொழும்பைத் தளமாகக் கொண்டுள்ள மக்கள் போராட்ட முன்னணி எனும் தமிழ்,சிங்கள, முஸ்லீம் செயற்பாட்டாளர்களைக் கொண்ட அமைப்பினர், பிரஜைகள் குழு, சுற்றுச்சூழல் அமைப்புகள், மற்றும் பொதுமக்கள், என பலரது பங்குபற்றுதலுடன் சாரணர் மாவத்தையிலிருந்து பேரணியாக வந்து ஜனாதிபதி செயலகம் முன்பாகப் போராடினார்கள்.

இந்தப் போராட்டத்தின்போது அதில் ஈடுபட்டவர்களில் இருந்து 10 பேரை ஜனாதிபதி செயலகத்திற்குள் அழைத்து மேலதிக செயலாளர், ஜனாதிபதி செயலாளர், ஜனாதிபதியின் ஆலோசகர் உள்ளிட்ட மூவர் அடங்கிய குழுவுடன் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. இதில் மன்னார் மக்கள் சார்பில் அறிக்கைகளும் வழங்கப்பட்ட தோடு, அமைக்கப்பட இருக்கின்ற 14 கோபுரங்களும் முற்று முழுதாக நிறுத்தப்பட வேண்டும், கனியமணல் அகழ்வு நடத்தப்பட வேண்டும், ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கின்ற 36 காற்றாலைகளினால் ஏற்பட்டிருக்கின்ற பாதிப்புகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் உள்ளிட்ட மூன்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசி முடிவு எடுக்கப்படும் எனக் கூறப்பட்டது.



ஆனாலும் அதன்பின்னரும் இந்தக் காற்றாலைகளை அமைப்பதற்கான பணிகள் நிறுத்தப்படாத நிலையில் மீண்டும் பொதுமக்கள் 26.09.2025 அன்று இரவு மன்னாரில் மக்கள் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்ட நிலையில் அங்கு போராடிய பொதுமக்கள், மதகுருமார்கள், உள்ளிட்டவர்கள் காடையர்களாலும், போலீசாராலும் தாக்கப்பட்டிருந்தார்கள். இவர்களில் பலர் வைத்தியசாலைகளிலும் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

அதன் பின்னரும் காற்றாலை அமைக்கும் பணி நடைபெறும் அது நிறுத்தப்படமாட்டாது என ஜனாதிபதியும் அறிவித்திருந்த நிலையில் மக்களது போராட்டம் தொடருகிறது இவர்களுக்கு ஆதரவாக 27.09.2025 அன்று வவுனியா நகரில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை மக்கள் போராட்ட முன்னணியினர் முன்னெடுத்திருந்தார்கள் இப் போராட்டமான வவுனியா, கிளிநொச்சி நகரங்களுக்கும் அடுத்தநாள் மன்னார் நகருக்கும் சென்று அங்கு தொடர்ந்தும் போராட்டத்தில் இணைந்திருந்தார்கள். இதிலும் பல பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தார்கள் அதேபோன்று 29.09.2025 அன்று மன்னார் நகரே முடங்கும் அளவிற்கான பாரிய போராட்டம் ஒன்றையும் மக்கள் நடத்தியிருந்தார்கள். இவ்வாறு மன்னாரில் தொடர் போராட்டங்களை அம்மக்கள் முன்னெடுத்து வருகிறார்கள் ஆனாலும் மக்களுக்கு விரோதமான அந்தக் காற்றாலைத் திட்டத்தைக் கைவிட அரசு தயாராக இல்லை எனும் அறிவிப்போடு பணிகள் தொடருகின்றன மக்கள் போராட்டமும் தொடருகிறது.

இந்நிலையில் மன்னார் மறைமாவட்ட ஆயருடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அதிலே மன்னார் மறை மாவட்ட ஆயர் காற்றாலைத் திட்டத்திற்கு அனுமதி வழங்கியிருப்பதாகவும் கூட செய்திகள் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனாலும் பொதுமக்கள் அதை ஏற்கவில்லை என மறுத்து எதிர்த்துக்கொண்டு தான் இருக்கிறார் கள், ஏனென்றால் பாதிக்கப்படுவது பொதுமக்கள் தானே. இதே வேளை மன்னார் மறை மாவட்ட ஆயர் கருத்துத் தெரிவிக்கையில் தனுடன் ஜனாதிபதி பேசியதாகவும் ஆனாலும் தான் அதற்கு அனுமதி வழங்கவில்லை எனவும் அவரும் கூறியிருக்கின்றார். எதுவாக இருந்தாலும் இது அந்த மக்களை பாதிக்கின்ற விடயம் என்பதால் இது நிறுத்தப்பட வேண்டும் என்பதில் பொதுமக்களும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் கருதுகின்றார்கள். அதன் அடிப்படையில் தொடர்ந்தும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

எமது நாட்டின் வளங்களை எந்த நாட்டிற்கும் விட மாட்டோம் எனக் கூறி ஆட்சியில மர்ந்தவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்.

• • •

## தனது கொள்கை. . . தொடர்ச்சி ...

கிளர்ச்சி வரை உள்ளக விடயங்களைக் கையாளுவதற்கே தனது ஆயுதப் படைகளைப் பயன்படுத்த ட்ரம்ப் விரும்புவது போலத் தெரிகிறது. சட்டம் ஒழுங்கைப் பேணுதல் என்ற போர்வையில், கூட்டாட்சி அதிகாரத்தில் தேசியப் பாதுகாப்புப் படைக்குப் பதிலாக இராணுவத்தைப் பயன்படுத்த ட்ரம்ப் விழைகிறார்.

இது மிகவும் ஆபத்தான கட்டம் ஆகும். அரசியல் ரீதியாக இது மிகவும் பலம் வாய்ந்த ஒரு நடவடிக்கை ஆகும். ட்ரம்பின் பார்வையில் அமெரிக்காவே ஒரு போர்க்களமாக மாறிவிட்டது. அதன் நகரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அதன் நிறுவனங்கள் எல்லாம் இடதுசாரிகளின் கைகளுக்குப் போய்விட்டன. இழந்த சக்தியை மீளப் பெறு வதற்கு பழமை வாய்ந்த விழுமியங்களான ஒழுக்கம், ஆண்மை, அதிகாரப்படிநிலை, தாய் நாட்டுப் பற்று போன்றவற்றை இராணுவம் கைக்கொள்ள வேண்டும்.

இதனை வெறும் அழகுபடுத்தலாகவோ அன்றேல் இழந்தவற்றின் நினைவுகளை மீட்டுப் பார்த்தல் என்றோ நினைத்துவிடக்கூடாது. குடிமக்களுக்கான ஒரு புதிய மதத்தை உருவாக்குவதை இது ஒத்தது. இங்கே இராணுவவாதமும் தேசியவாதமும் சங்கமிக்கின்றன. "போருக் கான அமைச்சு" என்று ட்ரம்ப் புதிதாக உருவாக்கியிருக்கும் அமைச்சு, அமெரிக்காவைப் பாதுகாப்பதற்கு மட்டும் உருவாக்கப்படவில்லை. எதிர்கால அமெரிக்கா எப்படி அமையப்போகிறது என்பதை இது கட்டியம் கூறுகிறது.

### கோட்பாடுகளுக்கான போர்

முன்வைக்கப்பட்ட சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்க இராணுவத்தில் ஏற்படுத்தப்படும் மிகப்பெரிய மாற்றமாக இது அமையும். இந்த சீர்திருத்தங்களை ஏற்றுக் கொள்ள மறுக்கும் தளபதிகள் தங்கள் பதக்கங்களைக் கழற்றிக்கொடுக்க வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பணிநிலையில் இருக்க விரும்புபவர்கள் கொள்கை ரீதியான மாற்றத்துக்கும் கட்டமைப்பு ரீதியான மாற்றத்துக் கும் தயாராக வேண்டும்.

ரஷ்யாவுக்கும் சரி, வெளி உலகத்துக்கும் சரி, இந்தக் கணம் மிகவும் முக்கியமானது. தங்களுக்கு வெளியிலுள்ள மிக முக்கியமான அச்சுறுத்தல் அமெரிக்கா என்றே ரஷ்யாவின் இராணுவ திட்டமிடல்கள் இன்றும் கருத்தில் கொள்கின்றன. ஆனால் அமெரிக்கா உண்மையாகவே தமது நாட்டில் கவனத்தை திருப்புமானால், அதாவது அகில உலகத்தினதும் காவல்காரன் என்ற நிலைப்பாட்டிலிருந்து மாறி, ஐரோப்பாவிலிருந்து தமது துருப்புகளை மீள அழைக்குமாக இருந்தால் உலகின் ஒட்டுமொத்த மூலோபாயமும் மாற்றமடையப் போகிறது.

ஆனால் தற்போதைக்கு குவாண்டிக்கோ தளத்தில் ட்ரம்ப் கூறிய விடயங்களுக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. ஒரு வகையாகப் பார்க்கும் பொழுது, இது வெறும் வாய்ச்சாலமாகத் தெரிகிறது. இன்னொரு வகையாகப் பார்ப்போமானால், இது மிகவும் பாரிய ஒரு மாற்றத்தின் தொடக்கம் ஆகும். இது உள்நாட்டு அரசியலுக்கான ஒரு ஆயுதமாகவும் கொள்கைகளில் ஒத்துப்போவதற்கும் அமெரிக்க இராணுவத்தைப் பயன்படுத்தும் ஒரு முயற்சி ஆகும்.

அப்படிப் பார்க்கும் போது, ட்ரம்பின் உரை உப்புச்சப்பற்றது என்று சொல்ல முடியாது. அமெரிக்காவுக்கான ட்ரம்ப்பின் தூர நோக்குப் பார்வையைச் சற்று உற்றுநோக்கும் பொழுது, அமெரிக்காவுக்கு வெளியே நடைபெறும் போர்களில் அமெரிக்க இராணுவம் அதிகம் பயன்படுத்தப்படப் போவதில்லை. இதற்கு மாறாக, உள்நாட்டில் குற்றச்செயல்கள், ஒழுங்கு சீர்குலைவு, கொள்கையை ஏற்றுக்கொள்ள மறுத்தல் போன்றவற்றுக்கு எதிராகவே அதிகமாகப் பயன்படுத்தப்படப்போகிறது.

உண்மையில் இது மிகவும் ஆபத்தான ஒரு சிந்தனை ஆகும். அதே நேரம், ட்ரம்பின் ஆதரவாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரு விடயம் ஆகும். இங்கே கொள்கை என்னவென்றால் பேச்சுவார்த்தைக்குப் பதிலாக பலமே அமைதியை ஏற்படுத்தும். திறன் அல்ல பிரமாணிக்கமே நிறுவனங்களைக் கட்டிக்காக்கப் போகின்றன.

உலகின் ஏனைய நாடுகளைப் பொறுத்தவரையில், குறிப்பாக ரஷ்யாவைப் பொறுத்தவரையில் இது ஒரு புதிய வாய்ப்பை வழங்கப்போகிறது. தனது வாளை அமெரிக்காவிலே சுழற்ற அமெரிக்கா முடிவுசெய்யுமாயின், வெளிநாடுகளில் செயற்படுவதற்கு ஏனைய நாடுகளுக்கு கூடுதல் வாய்ப்பு உருவாகும்.

தயவுசெய்து இதனைக் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள். உலகிலேயே மிகவும் பலம் வாய்ந்த இராணுவம் தனது தளபதிகளைக் களையெடுப்பதிலும், தனது கவனத்தை தனது நாட்டை நோக்கி மட்டும் திருப்புமானால் வரலாறு அமைதியாக எழுதப்படும் என்று சொல்ல முடியாது.

**நன்றி: rt.com**

**இனவாதத்தால் . . . தொடர்ச்சி . . .**

வழங்கக்கூடிய நிறுவனம் இருக்குமானால் எந்த விதத்திலும் அதனை இல்லாதொழிக்கப் போவதில்லை. அந்த வகையில் நாம் அவற்றையும் பாதுகாத்து மலையக மக்களையும் பாதுகாப்போம்" என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என்றும் தெரிவித்தார்.

### இனவாத அடிப்படையில் சூழ்ச்சி

இந்த நிலையில் மலையக அதிகார சபையை இல்லாமல் ஆக்கும் முயற்சியில் இனவாத சதி இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார். தாம் பாராளுமன்றத்தில் குறிப்பிட்ட கருத்துக்களையும் அரசாங்கத்தில் உள்ள உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் அவர் விமர்சித்துள்ளார்.

தமது சமூக ஊடக பக்கத்தில் இதனை பதிவிட்டுள்ள அவர், "ஜனாதிபதி மீளாய்வு நடைபெறுகிறது என பதில் வழங்கி விட்ட பிறகும், ஏன்? சில மலையக அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் அப்படி எதுவுமே, இல்லை என்பது போல வெட்கமில்லாமல் பொய் பேச வேண்டும்" என்று தெரிவித்தார். அத்துடன் அரசாங்கத்தின் உயர்மட்ட உறுப்பினர்கள் மேற்கொள்ளும் தீர்மானங்கள் தொடர்பில் ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் போதிய தெளிவின்மை காணப்படுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறிருக்க மலையக அதிகார சபையை முழுமையாக நீக்கி விட வேண்டும் என்ற முயற்சியில் சில அரச அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாக மனோ கணேசன் தெரிவித்தார் இனவாத ரீதியாக செயல்படும் மூன்று அதிகாரிகளின் பெயர்களையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். "பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி, மேலதிக செயலாளர் தீப்திகா குணரத்ன, சட்ட அதிகாரி தில்ஷானி பண்டார ஆகிய மூன்று அதிகாரிகள் இனவாத கண்ணோட்டத்தில் இந்த சபையை மூடி விடுவதில் உறுதியாக இருக்கிறார்கள்" என்று அவர் பாராளுமன்றில் தெரிவித்தார்.


"இவர்கள் என்ன, அரசாங்க அமைச்சர்களை விட பலமானவர்களா? நாம் உருவாக்கும் சட்டத்தை அமுல் செய்யவே அதிகாரிகள் இருக்கிறார்கள். சட்டம், கொள்கைகளை உருவாக்குவது, பாராளுமன்றம்" என்றும் மனோகணேசன் சுட்டிகாட்டினார். இந்தநிலையில் அரசாங்கத்தினதும் எதிர்தரப்பில் மனோ கணேசனினதும் கருத்துக்களை அவதானத்தில் எடுக்கும் போது மலையக அதிகாரசபை விடயத்தில் சர்ச்சை நிலவுகிறது என்ற விடயம் தெளிவாகிறது. மறுபுறம் ஜனாதிபதியின் கடிதத்தின் அடிப்படையில் அந்த அதிகார சபையை முன்னோக்கி கொண்டு செல்ல அரசாங்கம் இன்னும் இறுதி தீர்மானம் எடுக்கவில்லை என்பதும் புலனாகிறது.

அத்துடன் ஜனாதிபதி உள்ளிட்ட உயர் மட்ட அதிகாரிகளின் கூற்று இவ்வாறிருக்க சில பாராளுமன்ற உறுப்பினர்களும் சில அமைச்சர்களும் அதற்கு மாறான கருத்துக்களை வெளியிடும்போது அரசாங்கத்துக்குள் ஒற்றுமை இல்லை என்பதும் தெரியவருகின்றது. உயரிய சபையான பாராளுமன்றத்தில் இனவாத நோக்குடன் மலையக அதிகார சபையை இல்லாமல் செய்யும், செய்ய முயற்சிக்கும் அதிகாரிகளின் பெயர் விபரங்களும் வெளியிடப் பட்டுள்ளன.

அப்படியானால் மலையக அதிகார சபையை பாதுகாப்பதற்கு எதிர் தரப்பில் உள்ள சகல அரசியல் தலைவர்களும் ஒன்றிணைந்து தங்களின் கோரிக்கையை முன்வைக்க வேண்டும். மறுபுறம் தங்களுக்கான உரிமைக்காக மலையக சமூகமும் அணிதிரள வேண்டும். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களும் இவ்விடத்தில் மக்களின் பக்கம் நிற்க வேண்டும். சகலரும் மக்களின் பக்கம் நின்று சிந்திப்பதன் ஊடாக மக்களுக்காக சேவையாற்றக்கூடிய மலையக அதிகார சபையை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

• • •




**சர்வதேச நாணய . . . தொடர்ச்சி . . .**

ளாதாரங்களில் அதிகரித்து வரும் வட்டி செலவுகளால் உந்தப்படுகின் றது.

"உலகளாவிய பொதுக் கடன் 2029 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 100% ஐத் தாண்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது," அதிகரித்து வரும் கடன் வட்டிச் செலவுகளை உயர்த்துவது, விகிதங்களை அதிகரிப்பது, செலவினங்களைக் கட்டுப்படுத்துவது மற்றும் உலகளாவிய அரசாங்கங்களின் அதிர்ச்சிகளை உள்வாங்கும் திறனை பலவீனப்படுத்துவது போன்ற அபாயங்களை ஏற்படுத்தும் என ஜார்ஜீவா கூறினார்.

அமெரிக்க கூட்டாட்சிக் கடன் உயர்ந்து வருவதால், அதிக வட்டி விகிதங்கள் இருந்த போதிலும் வாஷிங்டன் தொடர்ச்சியான பற்றாக்குறையை இயக்கும் நிலையில் இந்த எச்சரிக்கை வந்துள்ளது. அக்டோபர் நிலவரப்படி, இது சாதனை அளவான $37 ரில்லியனை எட்டியுள்ளது, இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 125% ஆகும், வட்டி செலுத்துதல் இப்போது மிகப்பெரிய கூட்டாட்சி செலவுகளில் ஒன்றாகும், இது பாதுகாப்பு செலவினங்களை விட அதிகமாகும்.

உலகப் பொருளாதாரம் பற்றிய பரந்த எச்சரிக்கைகளுடன் ஜார்ஜீவாவின் கருத்துக்கள் வந்தன, இது "நமக்குத் தேவையானதை விட மோசமாக" செயல்படுகிறது, புவிசார் அரசியல், தொழில்நுட்பம் மற்றும் மக்கள்தொகையில் ஆழமான கட்டமைப்பு மாற்றங்கள் பொருளாதார நிச்சயமற்ற தன்மையை "புதிய இயல்பு" ஆக்கியுள்ளன.

"புதன்கிழமை அவுன்ஸ் ஒன்றுக்கு $4,000 என்ற சாதனையை எட்டிய தங்க விலையில் உயர்வு மற்றும் 25 ஆண்டுகளுக்கு முன்பு டாட்காம் குமிழியை நினைவூட்டும் அமெரிக்க பங்குகளுக்கான உயர்ந்த மதிப்பீடுகள் உட்பட. ட்ரம்பின் வரிகளின் தாக்கம் குறித்தும் ஜார்ஜீவா எச்சரித்தார், அவற்றின் "முழு விளைவு இன்னும் வெளிவர உள்ளது".

ஜூலை 2025க்கான அதன் முன்னறிவிப்பில், IMF உலகளாவிய வளர்ச்சி 2025 ஆம் ஆண்டில் 3.0% ஆகவும், 2026 ஆம் ஆண்டில் 3.1% ஆகவும் இருக்கும் என்று கணித்துள்ளது, இது முந்தைய கணிப்புகளை விட சற்று அதிகமாகும். அரசாங்கங்கள் பற்றாக்குறைகளைக் கட்டுப்படுத்தி, தங்களை மீண்டும் கட்டியெழுப்பா விட்டால், நிதி நெருக்கடிகள், வர்த்தகம் துண்டு துண்டாகப் பிரித்தல் மற்றும் உயர்ந்த சொத்து விலைகள் மீட்சியைத் தடம் புரளச் செய்யலாம். அடுத்த வாரம் ஒரு புதிய புதுப்பிப்பு வெளியிடப்படும் என்று ஜார்ஜீவா அவர் தெரிவித்துள்ளார்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்



